தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**7.05.2013 A.M**

---

## சூலூர், அன்னூரில் 120 அடி ஆழத்தில் நீர்

பருவ மழை பொய்த்ததால் கோவை மாவட்டத்தில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது என்று தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் தெரிவித்துள்ளது.

÷கோவை மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்ட அளவு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை கணக்கிடப்படும். பருவ மழைக்கு முன்னரும், பின்னரும் இந்த கணக்கீடு நடைபெறுவது வழக்கம். அதன்படி இந்த ஆண்டு, கோவை, காரமடை, அன்னூர், பெரியநாயக்கன்பாளையம், சூலூர், சுல்தான்பேட்டை, மதுக்கரை, தொண்டாமுத்தூர், கிணத்துக்கடவு, பொள்ளாச்சி வடக்கு, பொள்ளாச்சி தெற்கு, ஆனைமலை, சர்க்கார் சாமக்குளம், பேரூர் ஆகிய ஊராட்சி ஒன்றியங்கள் ஆய்வுக்காக தேர்வு செய்யப்பட்டன.

÷ஆய்வு முடிவில், கோவை மாவட்டத்தின் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சூலூர், அன்னூர் பகுதிகளில் 120 அடி ஆழத்துக்கு கீழ்தான் நீர்மட்டம் காணப்படுகிறது. காரமடை பகுதியில் 20 மீட்டருக்கு கீழ் நீர்மட்டம் உள்ளது.

÷கோவையில் கடந்த ஆண்டு 39 சதவீத மழை குறைவாக பெய்துள்ளது. மழை குறைவு காரணமாக காரமடை ஒன்றியத்தில் உள்ள இரும்பொறை பஞ்சாயத்தில் இந்த ஆண்டு ஜனவரி மாத கணக்கீட்டின்படி நிலத்தடி நீர்மட்டம் 14.20 மீட்டராக இருந்தது. இதுவே கடந்த முறை 9.50 மீட்டராக இருந்தது. ஏறத்தாழ 5 மீட்டர் நீர்மட்டம் இந்த ஆண்டு குறைந்திருக்கிறது என்று குடிநீர் வடிகால் வாரியம் தெரிவித்துள்ளது.

## உழவர் பெரு விழா

சேத்துப்பட்டு ஒன்றியத்தைச் சேர்ந்த ஆத்துரை ஊராட்சியில் உழவர் பெரு விழா திங்கள்கிழமை நடைபெற்றது.

விழாவுக்கு, வேளாண்மை உதவி இயக்குநர் வடமலை தலைமை வகித்தார். ஊராட்சி மன்றத் தலைவர் சுவாமிநாதன் முன்னிலை வகித்தார். விழாவில், விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் கைத்தெளிப்பான், ஜிப்சம், உயிர் உரம், பயிறு வகை விதைகள் வழங்கப்பட்டன .

உதவி வேளாண்மை அலுவலர் முருகன், பாபு, பட்டு வளர்ச்சி அலுவலர் சந்திரமௌலி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## "இரண்டாம் பசுமைப் புரட்சியைஏற்படுத்த வேண்டும்

விவசாயிகள் இருமடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருமானம் பெற்று இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டும் என்று எம்எல்ஏ  வே.குணசீலன் கேட்டுக்கொண்டார்.

செய்யாறை அடுத்த அனக்காவூர் வட்டாரத்தைச் சேர்ந்த தென்இலுப்பை கிராமத்தில் ஊழவர் பெருவிழா திங்கள்கிழமை நடைபெற்றது. விழாவுக்கு தலைமை தாங்கிப் பேசும்போது எம்எல்ஏ வே.குணசீலன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திருவண்ணாமலை வேளாண்மை துணை இயக்குநர் ஆர்.சந்திரசேகர், விதைச்சான்று உதவி இயக்குநர் பேபி பர்வதம், தலைமை கரும்பு அலுவலர் கோவிந்தராஜ், உதவி பொறியாளர் பாலமுருகன் ஆகியோர் அரசின் வேளாண் திட்டங்கள் குறித்துப் பேசினர்.

விழாவில் 50 சதவீத மானியத்தில் விசைத் தெளிப்பான், கைத்தெளிப்பான்,  உளுந்து விதைகள் உள்ளிட்டவை வழங்கப்பட்டன.

வேளாண் உதவி அலுவலர் சாந்தகுமார், அட்மா திட்ட மேலாளர் பாலமுருகன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

## பரமத்தி அருகே உழவர் பெருவிழா

பரமத்திவேலூர் வட்டம், பரமத்தி அருகேயுள்ள செருக்கலை புத்துப்பாளையத்தில் உழவர் பெருவிழா கொண்டாடப்பட்டது.

செருக்கலைபுதுப்பாளையத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இந்த உழவர் பெருவிழாவுக்கு, செருக்கலை ஊராட்சிமன்றத் தலைவர் ராமசாமி தலைமை வகித்தார்.

நாமக்கல் வேளாண் இணை இயக்குநர் (பொறுப்பு) முரளிதரன் முன்னிலை வகித்து, இரண்டாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில், வேளாண் தொழில் நுட்பங்களை பயன்படுத்தி

விளைச்சலை இரு மடங்காக்கி, விவசாயிகளின் வருவாயை மூன்று மடங்காக உயர்த்த வேண்டும் என்று விவசாயிகளைக் கேட்டுக் கொண்டார்.

சூரிய சக்தி மூலம் இயங்கும் பம்புசெட்டுக்கு மானியம் வழங்குவது குறித்தும், சொட்டுநீர் மானியம் குறித்தும், ஆமணக்கு சாகுபடி குறித்தும், நிலக்கடலைக்கு உயிர் உர விதை நேர்த்தி, மண் மாதிரி எடுத்தல், மரவள்ளிக் கிழங்கு நேர்த்தி ஆகியவை குறித்தும் செயல் விளக்கம் அளிக்கப்பட்டது.

நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குநர் லோகநாத பிரகாஷம், உதவி இயக்குநர்கள் குருலிங்கம், ராஜா மற்றும் வேளாண் உதவி இயக்குநர்கள் உள்பட 200-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## தம்மம்பட்டியில் கொத்தமல்லி கடும் விலை உயர்வு

தம்மம்பட்டி பகுதிகளில் கடும் வெயிலாலும், மழையில்லாததாலும் கொத்தமல்லி கட்டு ஒன்றின் விலை ரூபாய் 15 ஆக உயர்ந்துள்ளது.

சேலம் மாவட்டம், தம்மம்பட்டி, செந்தாரப்பட்டி, கொப்பம்பட்டி, நாகியம்பட்டி, உலிபுரம், மல்லியகரை, உப்பிலியபுரம் உள்ளிட்ட ஊர்களில் விவசாய வயல்களில் பலரும் கொத்தமல்லி பயிர் செய்துள்ளனர்.

தற்போது மழை இல்லாததாலும், கடும் வெயிலாலும் கொத்தமல்லி பயிர் கருகுகின்றன.

இதனால், விவசாயிகளுக்கு கடும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

கொத்தமல்லி பயிர் அதிகமான அளவில் தேசமடைந்துள்ளதால், அதன் விலையும் அதிகரித்து வருகிறது.

## மேட்டூர் அணை நீர்மட்டம்: 22.56 அடி

மேட்டூர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை மாலை 22.56 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 56 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து வினாடிக்கு 496 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.கல்லணையிலிருந்து தண்ணீர் திறக்கப்படவில்லை.

## சூரிய சக்தி பம்புக்கு ரூ.3.20 லட்சம் மானியம்

சூரிய சக்தி பம்புக்கு ரூ. 3.20 லட்சம் மானியம் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நாகர்கோவில் வேளாண்மை இணை இயக்குநர் மு. சையது அகமது மிராஞ்சி திங்கள்கிழமை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

மின்சாரத்தில் இயங்கும் பம்புக்கு மாற்றாக சூரிய சக்தியினால் இயங்கும் பம்ப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வகையில் அரசு சூரிய சக்தி பம்புக்கு மானியம் அறிவித்துள்ளது.

குமரி மாவட்டத்திற்கு பொது இனத்தின்கீழ் 4 பம்ப்புகளும், ஆதிதிராவிடர் இனத்திற்கு கீழ் 1 பம்ப்பும் ஒதுக்கீடு செய்துள்ளது. 5 குதிரை சக்தி திறன் கொண்ட பம்ப் நிறுவ ரூ. 4 லட்சம் செலவு ஆகும். இத் தொகையில் ரூ. 3,20,000 மானியம் வழங்கப்படும். விவசாயிகள் 20 சதவிகிதத் தொகையாக ரூ. 80 ஆயிரம் பங்குத் தொகையாக செலுத்த வேண்டும். 5 ஆண்டுக்கு பராமரிப்பு மேற்கொள்ளப்படும். விருப்பமுள்ள விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள வேளாண்மை விரிவாக்க மையங்களை அணுகி, திரும்பப் பெற முடியாத முன்பணத் தொகையாக ரூ. 10,000 அரசுக்கு செலுத்தி விண்ணப்பிக்கலாம் என தெரிவித்துள்ளார்.

## முழுமையான வறட்சி நிவாரண கணக்கெடுப்பு

முழுமையான கணக்கெடுப்பு நடத்தி, வறட்சி நிவாரணத் தொகையை வழங்கக் கோரி கிராம மக்கள் கோவில்பட்டி கோட்டாட்சியர் அலுவலகத்தை திங்கள்கிழமை முற்றுகையிட்டனர்.

கோவில்பட்டி வட்டத்துக்குள்பட்ட காளாம்பட்டி, குமரெட்டையபுரம், சரவணாபுரம் ஆகிய பகுதிகளில் மானாவாரியில் பூமியில் உளுந்து, பாசி, கம்பு, மக்காச்சோளம் ஆகியவற்றை அப்பகுதியினர் பயிரிட்டிருந்தனர். போதிய மழையின்றி வறட்சி ஏற்பட்டு, விளைச்சலின்றி போய்விட்டது.

நிவாரணம் கேட்டு, அரசுக்கு கோரிக்கையை அளித்தோம். அரசு பரிசீலனை செய்து ஏக்கருக்கு ரூ. 3 ஆயிரம் வழங்கப்படும் என தெரிவித்துள்ளது. கிராமங்களில் முறையாக கணக்கெடுப்பு செய்யாமல் கிராம நிர்வாக அலுவலர்கள் அலுவலகத்தில் இருந்தபடியே கணக்கெடுப்பு செய்துள்ளனர்.

இதனால் பயிர் செய்யப்பட்ட நிலங்களுக்கு முழுமையாக நிவாரணம் கணக்கிடப்படவில்லை.

உடனடியாக வட்டாட்சியர், கிராம நிர்வாக அலுவலர் ஆகியோர் முழுமையாக கணக்கெடுப்பு செய்து, அனைவருக்கும் நிவாரணம் கிடைக்க வழிவகை செய்ய வேண்டும் எனக் கூறி, அப்பகுதி

கிராம மக்கள் கயத்தாறு முன்னாள் ஊராட்சி ஒன்றியத் துணைத் தலைவர் ஜெயச்சந்திரன் தலைமையில், கோவில்பட்டி கோட்டாட்சியர் அலுவலகத்தை முற்றுகையிட்டனர்.

மதிமுக மாநில விவசாய அணிச் செயலர் அ.வரதராஜன் முன்னிலை வகித்தார்.

காளாம்பட்டி ஊராட்சித் தலைவர் ராகவன், கயத்தாறு மதிமுக ஒன்றியச் செயலர் கணபதிபாண்டியன், மதிமுக கட்சியின் மாநில தீர்மானக் குழு உறுப்பினர் கிருஷ்ணசாமிபாண்டியன், கழுகுமலை மதிமுக நகரச் செயலர் வையாபுரி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

பின்னர், போராட்டக் குழுவினர் கோட்டாட்சியர் கதிரேசனை சந்தித்து, கோரிக்கை மனு அளித்தனர்.

பின்னர் போராட்டக் குழுவினர் கலைந்துசென்றனர்.

## பசி - வயிறு - உணவு

உணவில்லாமல் நாமில்லை. ஏன் செடி, கொடி, மரங்கள், பறவைகள், பிராணிகள் எல்லாமும்தான். யாரும் பசியால் தவிக்கக்கூடாது என்றுதான் பாரதி "இந்த ஜகத்தையே அழிக்கலாம்' என்றார். பசி வந்தால் பத்தும் பறந்துபோய் விடுகிறது, பசித்தவன் உணவையே தெய்வம் என நினைக்கிறான். இதனால்தான் இடும்பைகள் வயிற்றுடன் வாழ்வதரிது.

உணவு தேவை என்பதில் ஐயமில்லை. தேவை ஒருபக்கம் இருக்க, உணவுக்கு ஓர் ஈர்ப்பு சக்தி உள்ளது. எந்த ஒரு பொழுதுபோக்கு இடமும், அது கடற்கரையாகவே இருக்கட்டும், உணவு விற்பனை இல்லாமல் முழுமை பெறாது. மார்கழி மாதத்தைப் பற்றி ஒரு நடுத்தர வயதினரைக் கேட்டால், ""எங்கள் கோவில் வெண்பொங்கல்..." என்று கண்ணில் நெய் மின்னக் கூறுவார்.

நாம் எந்த மதத்தினராக இருந்தாலும் பசித்தவருக்கு அன்னமிடுவது உயர்வாகக் கூறப்படுகிறது. ரம்ஜான் நோன்பு முடிவு பெறுகையில் நாம் விருந்து சாப்பிடுவதற்கு முன்பாக ஏழைகள் பசியை ஆற்ற வேண்டும்; ஏசுநாதர் 5 ரொட்டிகளை 5,000 பேர்களுக்கு விநியோகம் செய்து அவர்கள் சாப்பிட்டபின் 12 கூடை ரொட்டித் துண்டுகள் மீந்துபோயின; "வாரி தீரவே காசு நல்குவீர்' என்று பசியும் பஞ்சமும் போக சம்பந்தர் பாடுகிறார். காசு கிடைத்ததும் மக்கள் பசியை ஆற்றுகிறார்.

பண்டிகைகளின் சிறப்பு, ஒன்று பள்ளிக்கூட விடுமுறை; இன்னொன்று உணவு. கிறிஸ்துமஸ் கேக்காக இருக்கலாம், சர்க்கரைப் பொங்கலாக இருக்கலாம் அல்லது பிரியாணியாக இருக்கலாம். பண்டிகையும் சிறப்புணவும் இரட்டைப் பிறப்பு. ஆண்டவனை நினைக்கும்பொழுது

ஆகாரத்தையும் நினைக்கிறோம். ஏனென்றால் பசி தீர்ந்து ஒரு திருப்தி வருகிறதே அது வயிறு ஆசிர்வதிக்கிறது என்று பொருள்.

ஓரினத்தின் ஆணிவேர் நினைவுகளை, பதிவுகளை அழிப்பதற்கு எளிதான வழி உணவுப் பழக்கத்தை மாற்றுவதுதான். இந்த மாற்றம் சத்தமில்லாமல் ஆனால் சந்தேகமில்லாமல் நடந்து கொண்டிருக்கிறது. இந்தத் தலைமுறைக்கு அதுவும் நகர் வாழ் இளைஞர்களுக்கு நூடுல்ஸ், பிட்ஸாவைத் தெரியும், நம் பாரம்பரிய உணவு பரிச்சயமில்லை. ஆகையால்தான் ""கொங்கு நாட்டுக் கொண்டாட்டம்", ""தஞ்சைத் தலைவாழை", ""திருநெல்வேலித் திருவிழா" என்று நம் உணவு வகைகளை சீவி முடித்து சிங்காரித்து அறிமுகப்படுத்தும் நிலையில் உள்ளோம்.

ஒரு மொழி ""இறப்பது"போல, ஓரினம் ""அழிவது"போல, ஓர் ""உணவுப் பாரம்பரியம்" காணாமல் போவதும் வருந்தத்தக்கதே. பல நூற்றாண்டு பதிவுகளை பிட்ஸா தின்றே கவலையில்லாமல் பெயர்த்துக் கொண்டிருக்கிறோம். அன்று தொலைக்காட்சியில் கோபிநாத் உணவுப் பழக்கத்தைப் பற்றி ஒரு நிகழ்ச்சி நடத்தினார். அதில் பிட்ஸா கட்சி பெருமிதமாக பதில் கூறியது, கம்பு தினைக் கட்சி அடக்கி வாசித்தது. பிட்ஸா கட்சிக்காரர் ஒருவர் பாவம் தன் அறியாமையால், "பணம் இல்லாதவர்கள்தான் கம்பு, கேழ்வரகு சாப்பிடுவார்கள்' என்றுகூட கூறினார் என்று நினைவு. நாளைக்கே அமெரிக்காவின் ஊடகக்கணைகள் ""கம்பிலிருக்குத் தெம்பு" என்று பாயட்டும், அப்பொழுதாவது நம் முன்னோர்களின் உணவு சிறந்தது என்று விளங்குகிறதா என்று பார்ப்போம்.

நாம் உண்ணும் உணவு, "நாம் யார்' என்றும் அறிமுகம் செய்கிறது. ஜெயின் உணவு, ஹலால் உணவு, கோஷர் உணவு இதன் உதாரணங்கள். இன்னொரு வகை அறிமுகமும் உண்டு. சில வருடங்களுக்கு முன் வெங்கனூர் புகழேந்தி என்பவர் எழுதிய ""வைர திலா" என்ற புத்தகத்தை நெய்வேலி புத்தக விழாவில் வெளியிட்டேன். அது "ஹெச்.ஐ.வி.' பிரச்னை பற்றிய கதை. ஆனால், அதில் ஒரு காட்சி உணவைப் பற்றியது. தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஓர் இளைஞர், கல்லூரி மாணவர், விடுமுறைக்கு தன்னுடைய கிராமத்திற்கு வருவார். எல்லா அம்மாக்களைப் போல அந்த அம்மாவும், ""நல்லா சாப்பிட்டாயா" என்று கேட்பார்.

""ஆமாம்மா நல்லா சாப்பிடுவேன், தினமும் வெள்ளைச்சோறு"

""தினமுமா வெள்ளைச் சோறு?"

""ஆமாம்மா, அது ஐயமாரு கல்லூரி"

இதைப் படித்து பல நாள்கள் என் மனதை ஏதோ பிராண்டியது. இந்தியா என்ற துணைக் கண்டத்தில் எத்தனை நாடுகள் ஒன்றை ஒன்று தொடாமல்! ஒன்று வெள்ளைச் சோறா என்று வாயைப் பிளக்கிறது, இன்னொன்று தினமும் சாதம்தானா என்று உதட்டைச் சுழிக்கிறது. மக்களாட்சிதான் நடக்கிறது. ஆனால், நாம் உண்ணும் உணவே நம்மைப் பிரிக்கிறது, அடையாளம் காட்டுகிறது, உயர்வு தாழ்வு என்கிறது. அப்பொழுது எல்லோரும் சமமா? ஒன்றும் வேண்டாம், "வாடகைக்கு வீடு' பக்கங்கள் பாருங்கள். "வெஜிடேரியன் மட்டும்' என்று சொன்னால் போதும்... இல்லையா?

எந்த வரிசையில் நாம் நம் குடும்பங்களில் உணவருந்த அழைக்கப்படுகிறோம் என்பது நம்முடைய சமூக மதிப்பிற்கு ஒரு குறியீடு. ஆண்கள் முதலில் பின்னர் பெண்கள். இந்த "லேடீஸ் ஃபர்ஸ்ட்' எல்லாம் மிக மிகக் குறைந்த அளவில் நடைபெறும் புதிய சமூக வழக்கம். மற்றபடி ஆண்கள்தான். மாப்பிள்ளை, விருந்திற்கு வந்தால் பலவித உணவு வகைகள் தயார் செய்யப்படும். அவரும் "தன்னைப்போல் இல்லை' என்று வலம் வருவார் - அவருக்கே மாப்பிள்ளை வரும்வரை. மருமகள் வரப்போகிறாள் என்று பாயசம் செய்வது அரிது. இது வசதியுள்ள குடும்பத்தின் நிலை. சாப்பாட்டிற்கு வசதியில்லாத குடும்பங்களில் ஆண் மக்கள் சாப்பிட்டது போக பெண்கள். இதைப் பார்த்துப் பார்த்துப் பழகிய பெண் மனதில், "தான் ஒரு இரண்டாம்தர பிரஜை' என்ற எண்ணம் அழுத்தமாகப் பதிகிறது. உணவு என் மதிப்பை, என் தகுதியை, என் அந்தஸ்தை வரையறுக்கிறது, விதிக்கிறது, விளக்குகிறது.

இதில் கடையேனிலும் கடையேனாய் நிற்பவர் திருமண மண்டபங்களில் வீசி எறியப்படும் எச்சில் இலைகளைத் துழாவுபவர். இந்த இலைகளுக்கு சற்றே தள்ளி அதோ குளிர்சாதன அறைகளில் நூறு வகை உணவு பரிமாறப்படும். இங்கே கொழுந்து விட்டெறியும் பசியுடன் எச்சிலில் உணவைத் தேடும் மனிதருக்கு, இந்த நாட்டில் மக்களாட்சி நடக்கிறது என்று தெரியுமா?

மக்களுக்காக, மக்களால், மக்களுடைய ஆட்சி என்று தோன்றுமா? உடல் முழுவதும் பசி என்ற ஒரே உணர்வு நிரம்பியிருக்கும் அவருடைய சிந்தனை, உணர்வுகள், அறிவு எல்லாம் கழன்றுபோய் இந்த எச்சிலுடன் கலந்திருக்கும்.

இப்பொழுது "உணவு உத்தரவாத (பாதுகாப்பு) சட்டம்' வரப்போகிறது. உலக சுகாதார அமைப்பு இந்த உணவுப் பாதுகாப்பு உரிமை மூன்று தூண்களின் மேல் கட்டப்பட்டுள்ளது என்று கூறுகிறது. உணவு தேவையான அளவில் தொடர்ந்து கிடைக்க வேண்டும். அதைப் பெறத் தேவையான வசதியிருக்க வேண்டும். ஆரோக்கியமான உணவுடன் சுகாதாரமான நீரும் கழிப்பறை வசதியும் இருக்க வேண்டும்.

அடிப்படையில் இந்த உணவுப் பாதுகாப்பு சட்டம் நம் மக்களுக்கு ஆரோக்கியமான உணவைப் பெறக்கூடிய நிலையில், தேவையான அளவில் தருவதற்கு வழி வகுக்கும் குறிக்கோளுடன் இயற்றப்படுவதாகக் கூறுகிறார்கள். இதில் குறிப்பிட்ட குடும்பங்களை வகைவகையாகப் பிரித்து ஒவ்வொருவரும் எவ்வளவு உணவு தானியங்களைப் பெற வேண்டும் என்று நிர்ணயிக்கிறார்கள். பொது விநியோக அமைப்புகளைச் சீர் செய்தல், குழந்தைகள், கர்ப்பிணித் தாய்கள் மற்றும் குழந்தைகளுக்குப் பால் கொடுக்கும் தாய்கள் எல்லோருக்கும் முதலுரிமை என்பது போன்ற ஷரத்துகளும் உள்ளன. சட்டத்தில் குறைபாடுகள் உள்ளது என்றும் விவாதம் இருக்கிறது. சட்டம் இயற்றினால் மட்டும் போதாது. அது நன்றாக அமல்படுத்தப்படுகிறதா என்று நாம்தான் கவனமாகப் பார்க்க வேண்டும். இது மக்களாட்சி இல்லையா?

நாம்தான் சட்ட நடைமுறையில் பொத்தல் இல்லாமல் விரிசல் இல்லாமல் இருக்கிறதா என்று கவனிக்க வேண்டும். 100 ரூபாய்க்கு மாற்றாக பத்து ரூபாய் கொடுங்கள் என்று கேட்டு ஒன்பது தாள்கள் நீட்டினால் நாம் சும்மா இருப்போமா? அதுபோலத்தான் சட்டத்தின் நிர்வாகம் சரியாக இல்லை என்றால் ""அசால்ட்டாக'' (சென்னையின் இந்தக் கண்டுபிடிப்பிற்கு தமிழ்ச் சொல் தேடினேன், இதன் பொருள் களம் அந்தச் சொற்களில் சிறிது குறைவாகவே தெரிந்தது) இருக்கக் கூடாது.

பிறகு நம் வீட்டின் வாயிலில் நிர்வாகக்குறை எட்டிப் பார்த்தபின் ""என்ன சார்? எல்லாத்திலேயும் ஊழல்'' என்று ஒப்பாரி வைக்கும் உரிமையை இழந்து விடுகிறோம். "சிவில் சொசைட்டி' என்கிறார்களே, அது செவ்வாய் கிரகவாசிகள் இல்லை நாம்தான்; இந்த உணவு உத்தரவாதச் சட்டம், வறுமைக்கோட்டில் வாழ்பவர்களுக்கு உதவ வேண்டும். அதில் யாரையும் சதி செய்யவிடக் கூடாது.

நம் நாட்டில் நம்ப முடியாத சில நிகழ்ச்சிகள் நடக்கும். மூன்று வருடங்களுக்கு முன் உச்ச நீதிமன்றம் பல்லாயிரம் மக்கள் பசியால் வாடும்பொழுது, "எப்படி உணவு தானியங்களைக் கிடங்குகளில் அழுகவிடலாம்?' என்று அரசைக் கடுமையாகக் கண்டித்தது. நிலைமை மாறியதாகத் தெரியவில்லை.

அதே வருடத்தில் ஹர்ஷ் மந்தர் (எழுத்தாளர், ஆர்வலர்) எழுதினார், ""இந்தியாவே ஓர் அதிசயம், புரியாத புதிர். ஒருபக்கம் உலகின் கோடீஸ்வரர்கள் இந்தியாவில் உள்ளார்கள், அருகே லட்சோபலட்சம் இந்தியர்கள் காலி வயிறுடன் உறங்குகிறார்கள்.'' அவர் சந்தித்த தலித் தாயார்கள் தாங்கள் தங்கள் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுத்த கடினமான பாடம், "பசியுடன் தூங்கப்போவது எப்படி என்பதுதான்' என்றார்களாம்.

தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழிப்பேன் என்று மீசையை முறுக்கிய பாரதி இன்று என்ன செய்வார்? இந்தியக் குழந்தைகள் பசியுடன் உறங்கக் கற்றுக் கொள்கின்றனர். உலகம் சுகமாகவே உருண்டு கொண்டிருக்கிறது. ""உணவு இருக்கிறது... ஆனால் இல்லை!" சிரிப்புதான் வரவில்லை...

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

7.05.2013 A.M

## தமிழகத்தில் மழைக்கு வாய்ப்பு; வங்கக் கடலில் புதிய காற்றழுத்த தாழ்வு

சென்னை: வங்க கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலையால், அடுத்த, 24 மணிநேரத்தில் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் மழை பெய்யக்கூடும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. தமிழகத்தில் கத்திரி வெயில் எனப்படும் அக்னி நட்சத்திரம், கடந்த, 4ம் தேதி துவங்கியது. இதையடுத்து கடந்த இரண்டு நாட்களாக வெயில் வறுத்தெடுத்தது.இந்த நிலையில், குமரி கடல் பகுதியில் கால நிலை மாற்றம் ஏற்பட்டுள்ளது. இதனால், நேற்று சில இடங்களில் மழை பெய்தது. நேற்றும், நேற்றுமுன்தினமும் பல மாவட்டங்களில் வெப்பத்தின் அளவு சற்று குறைந்தது. அதிகபட்சமாக, நேற்று மதுரையில் 103, திருச்சியில் 101, வேலூரில் 100 டிகிரி பாரன்ஹீட் வெயில் பதிவாகியது. கரூர்பரமத்தி, தர்மபுரியில் தலா 98, சென்னை மீனம்பாக்கம், சேலம், தூத்துக்குடியில் 96, கோவையில் 91, கன்னியாகுமரியில் தலா 89, கொடைக்கானல் 68 டிகிரி பாரன்ஹீட் வெயில் பதிவாகியது. இது குறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது: தென்மேற்கு வங்க கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகியுள்ளது. இதனால், அடுத்த, 24 மணிநேரத்தில், தமிழகத்தின் தென் மாவட்டங்களில் ஒருசில இடங்களிலும், தமிழகத்தின் வட மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரியில் ஓரிரு இடங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பருத்தி உற்பத்தி 3.40 கோடிபொதிகளாக இருக்கும்

புதுடில்லி:நடப்பு பருவத்தில் (அக்.,-செப்.,), நாட்டின் பருத்தி உற்பத்தி, 3.40 கோடி பொதிகளாக இருக்கும் என, பருத்தி ஆலோசனை கழகம் மதிப்பீடு செய்துள்ளதாக, மத்திய ஜவுளி துறை இணை அமைச்சர் பனபாக லட்சுமி லோக் சபாவில் தெரிவித்தார்.நடப்பு பருவத்தில், நாட்டின் பருத்தி உற்பத்தி, 3.40 கோடி பொதிகளாக (ஒரு பொதி=170 கிலோ) இருக்கும். இதில், 2.70 கோடி பொதிகள், உள்நாட்டு பயன்பாட்டிற்கு தேவைப்படும், 81 லட்சம் பொதிகள் ஏற்றுமதியாகும் (கையிருப்பையும் சேர்த்து) என, எதிர்பார்க்கப்படுகிறது. தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு பருத்தி உள்ளதால் பற்றாக்குறை ஏற்பட வாய்ப்பில்லை.கடந்த, 2011-12ம் பருவத்தில், நாட்டின் பருத்தி உற்பத்தி, 3.52 கோடி பொதிகளாக இருந்தது. 1.27 கோடி பொதிகள், ஏற்றுமதி செய்யப்பட்டனஎன, அமைச்சர் மேலும் கூறினார்.

## கோடை சாகுபடியை காக்க மும்முனை மின்சாரம் கேட்டு கலெக்டரிடம் மனு

தஞ்சாவூர்: "தஞ்சையில், கோடை சாகுபடியை காப்பாற்றும் வகையில் விவசாயத்துக்கு 15 மணி நேரம் மும்முனை மின்சாரம் வினியோகிக்க கலெக்டர் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என, வலியுறுத்தி, விவசாயிகள் மனு கொடுத்தனர்.திருவையாறு தாலுக்கா வரக்கூர், கண்டமங்கலம், அம்மையகரம், செந்தலை, மணத்திடல், பழமானேரி, திருக்காட்டுப்பள்ளி, முள்ளக்குடி, ஆர்க்காடு, கூடநாணல் உள்பட 20 கிராமங்களை சேர்ந்த அசோகன், சத்தியமூர்த்தி, சுந்தர்ராஜன் உள்பட 50 விவசாயிகள் ராயமுண்டான்பட்டி வக்கீல் ஜீவக்குமார் தலைமையில் தஞ்சை கலெக்டர் அலுவலகத்துக்கு நேற்று திரண்டு வந்தனர். இதனால், பரபரப்பு ஏற்பட்டது.பின்னர், டி.ஆர்.ஓ., சுரேஷ்குமாரிடம் கொடுத்த கோரிக்கை மனுவில் விவசாயிகள் கூறியிருப்பதாவது:காவிரி டெல்டா மாவட்டங்களில், கடந்தாண்டு காவிரி நீரின்றியும், மழைநீரின்றியும் குறுவை சாகுபடி அடியோடு பாதித்தது. இதனைத்தொடர்ந்து, சம்பா பயிரும் கருகியது. இதனால், விவசாயிகள் நஷ்டம் அடைந்தனர். இதையடுத்து, தஞ்சையில் பல்வேறு பகுதிகளில், நடப்பாண்டு கோடை சாகுபடியாக எள், உளுந்து சாகுபடியை விவசாயிகள் மேற்கொண்டுள்ளோம்.இந்நிலையில், எவ்வித முன்னறிவிப்புமின்றி, கடந்த ஒன்றாம் தேதி முதல் மும்முனை மின்சார நேரத்தை, மூன்று மணி நேரமாக குறைத்து வினியோகிக்கப்படுகிறது.எனவே, நடப்பாண்டு கோடை கால சாகுபடி முற்றிலும் அழியும் சூழல் ஏற்பட்டுள்ளது. இதை தடுக்கும் வகையில், டெல்டா மாவட்டமான தஞ்சையில் 15 மணிநேரம் மும்முனை மின்சாரம் வினியோகிக்க, கலெக்டர் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.இவ்வாறு, அதில் கூறியுள்ளனர்.

## ஆயிரம் ஏக்கரில் பசுந்தீவன புல் வளர்க்க மானியம் கலெக்டர் தகவல்

சிவகங்கை:சிவகங்கையில்,பசுந்தீவன புற்கள் வளர்ப்பிற்கு மானியம் வழங்குவது குறித்து, விவசாயிகளுக்கான ஆலோசனை கூட்டம் நடந்தது. கலெக்டர் ராஜாராமன் தலைமை வகித்தார். விவசாய இணை இயக்குனர் செல்லத்துரை, கால்நடை மண்டல இணை இயக்குனர் பாலகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர். குன்றக்குடி வேளாண் ஆராய்ச்சி நிலைய பேராசிரியர் பழனிச்சாமி, கலெக்டர் நேர்முக உதவியாளர் முத்துக்கிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். கலெக்டர் கூறுகையில்,"" டெல்டா அல்லாத மாவட்டங்களில், பசுந்தீவன வளர்ப்பினை அதிகரிக்கும் நோக்கில், விவசாயிகளுக்கு 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. இதில், ஏக்கருக்கு ரூ.13,600 செலவாகும். இதில், ரூ.6,800 மானியமாக வழங்கப்படும். முதற்கட்டமாக ஆயிரம் ஏக்கரில் இத்திட்டம் செயல்படுத்தப்படும். அரை ஏக்கர் முதல் அதிக பட்சம் 5 ஏக்கர் வரையுள்ள, கிணற்றுப்பாசன விவசாயிகள், பசுந்தீவன வளர்ப்பில் ஈடுபடலாம். விளைந்த

பசுந்தீவனத்தை கிலோ ரூ.5க்கு, பால் கூட்டுறவு சங்கங்களே நேரடியாக எடுத்துக்கொள்ளும். இதில், சேர்ந்து பயன்பெற விரும்பும் விவசாயிகள், விவசாய, கால்நடை துறை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்," என்றார்.

## வறட்சியால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு தமிழக முதல்வர் வழங்கி யுள்ள 103 கோடி ரூபாய் நிவாரணத் தொகை இம்மாத இறுதிக்குள் வழங்கப்படும்

தூத்துக்குடி: வறட்சியால் பாதிக்கப்பட்ட தூத்துக்குடி மாவட்ட விவசாயிகளுக்கு தமிழக முதல்வர் வழங்கி யுள்ள 103 கோடி ரூபாய் நிவாரணத் தொகை இம்மாத இறுதிக்குள் வழங்கப்படும். நிவா ரணம் பெறக் கூடிய விவசாயிகளின் பெயர் பட்டியல் தொடக்க வே ளாண்மை கூட்டுறவு சங்கம் உள்ளிட்ட முக்கிய இடங்களில் வைக்கப்படும் என்று கலெக்டர் ஆஷீஷ்குமார் தெரிவித்தார். தமிழகத் தில் வறட்சி யால் பாதிக்கப்பட்ட விவசாயி களுக்கு ஆயிரக் கணக்கான கோ டி ரூபாய் நிவாரண உத வியை முதல்வர் ஜெ., அனுமதித் துள்ளார். தூத்துக்குடி மாவட்டத்தில் ஒரு லட்சத்து 95 ஆயிரம் விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப் பட்டுள்ளனர். இவர்களுக்கு 103 கோடி ரூபாய் நிவாரண தொகை யை அரசு ஒதுக்கீடு செய்துள்ளது.

இது குறித்து ஆலோசிக்க சிறப்பு விவசா யிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நேற்று கலெக்டர் ஆஷீஷ்குமார் தலைமையில் நடந்தது. வேளாண்மை இணை இயக்குனர் ரஞ்சித்சிங் தன்ராஜ், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (பொது) ஜீவராஜ், கால்நடை பராமரிப்புத் துறை இணை இயக்குனர் கெங்கராஜூ, கலெக்டர் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் பங்

கேற்ற விவசாயிகள் ஒட்டு மொத்தமாக வறட்சி நிவாரணம் கிடைக்க கூடிய விவசாயிகளின் பெயர் பட்டியலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் எழுதி வைக்க வேண்டும் என்று வலியுறுத்தினர். இதற்கு பதில் அளித்து பேசிய கலெக்டர், நிவாரண உதவி முமையாக விவசாயிகளுக்கு எந்தவித சிறிய பிரச்னைக்கும் இட மளிக்காத வகையில் கிடைக்க வேண்டும் என்று முதல்வர் தெரிவித் துள்ளார். இதனால் நிவாரண தொகை விவசாயிகளுக்கு எந்த பிரச்னையும் இன்றி அவர்களின் பாங்கு கணக்குகளில் தொகை வரவு வைக்கப்படும். வறட்சியால் பாதிக்கப் பட்டு தற்போது அரசு வழங்கியுள்ள நிவாரண உதவி பெறக் கூடிய விவசாயிகளின் பெயர் பட்டியல், அவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரண தொகை விபரம் ஆகியவை அடங்கிய பட்டியல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம், கலெக்டர் அலுவலகம்,

சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகம், கிராம நிர்வாக அலுவலர் (வி.ஏ.ஓ) அலுவலகம், சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலகம் ஆகிய இடங்களில் விவசாயிகளின் பார்வைக்கு தெரியும் அளவிற்கு ஒட்டப்படும் என்று கலெக்டர் தெரிவித்தார்.

விவசாய சங்க நிர்வாகிகள் ராஜேந்திரன், கணபதிராமன், பெருமாள், தமிழ்மணி, ரெங்கசாமி, சித்தவன், முன்னாள் எம்.எல்.ஏ அய்யலுசாமி மற்றும் விவசாயிகள் பேசுகையில், இந்த 103 கோடி ரூபாய் தொகையை விரைவாக வழங்க வேண்டும். அம்மா திட்டம், ஜமாபந்தி போன்ற பணிகள் நடப்பதால் விவசாயிகளுக்கு வழங்க கூடிய நிவாரண தொகை கிடைப்பதில் காலதாமதம் ஆகிவிடக் கூடாது. மானாவாரி பயிர்களுக்கு மட்டும் நிவாரணம் வந்துள்ளது. பாசன பயிர்கள் பாதிப்பிற்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

பல கிராமங்களில் வி.ஏ.ஓக்கள் பணியிடம் இல்லை. ஒரு வி.ஏ.ஓ பல கிராமங்களை சேர்த்து பார்த்து பணி செய்ய வேண்டிய நிலை இருக்கிறது. இதுபோன்ற பிரச்னையால் வறட்சி நிவாரண தொகை வழங்குவதில் தொய்வு ஏற்பட்டு விடக் கூடாது என்றனர்.

இதற்கு பதில் அளித்த கலெக்டர், நிவாரண தொகை இம் மாத இறுதிக்குள் முழுமையாக வழங்கி முடிக்கப்படும். ஏற்கனே விவசாயிகள் பாங்க் கணக்கு எல்லாம் துவக்கி விட்டனர். வறட்சி நிவாரணம் இல்லாத இடங்களில் உள்ள வி.ஏ.ஓக்களை இம் மாத இறுதி வரை வறட்சி நிவாரண தொகை வழங்க கூடிய இடத்தில் பணியாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதனால் எந்தவித காலதாமதமும் ஏற்படாது. அம்மா திட்டம், ஜமாபந்தி போன்ற பணிகளும் நடக்கும்.

வறட்சி நிவாரண உதவித் தொகை வழங்கும் பணியும் நடக்கும். மாவட்ட நிர்வாகம், அதிகாரிகள், ஊழியர்களுக்கு தான் இதில் கூடுதல் டூட்டி இருக்கும். அதனை நாங்கள் பார்த்து கொள்வோம் என்றார்.

### பலத்த காற்றுடன் மழை: வாழை மரங்கள் சேதம்

திற்பரப்பு:மலையோர பகுதிகளில் பலத்த காற்றுடன் மழை பெய்ததில் நூற்றுக்கணக்கான வாழை மரங்கள் முறிந்தன.

கோடை வெயிலின் தாக்கம் அதிகரித்து மக்கள் குடிநீருக்கு அவதிப்பட்டு வந்தனர். மக்கள் மழைக்காக ஏங்கிய நிலையில், கடந்த 4ம் தேதி அக்னி நட்சத்திரம் துவங்கியது. இதனால், கோடை வெயிலின் தாக்கம் மேலும் அதிகரிக்கும் என பொதுமக்கள் பயந்திருந்தனர்.

இந்நிலையில், நேற்று(6ம் தேதி) மதியத்திற்கு பின் மாவட்டத்தில் பல பகுதிகளில் பலத்த மழை

பெய்தது.

சில பகுதிகளில் இடி, மின்னலுடன் சுமார் ஒரு மணி நேரம் கனமழை பெய்தது. திற்பரப்பு சுற்றுவட்டாரப் பகுதிகளில் மழையுடன் பலத்த காற்றும் வீசியது. இதனால், பல பகுதிகளில் நூற்றுக்கணக்கான வாழை, ரப்பர், பலா மரங்கள் காற்றில் முறிந்து விழுந்தன. திருவரம்பு பாடகச்சேரியைச் சேர்ந்த மணி என்பவர் குத்தகைக்கு நிலத்தை எடுத்து வாழை நடவு செய்து வந்தார்.

இதில், இரண்டு வயல்களில் நூற்றுக்கும் மேற்பட்ட குலை தள்ளிய நிலையில் காணப்பட்ட வாழை மரங்கள் முறிந்தன. மேலும், திற்பரப்பை சேர்ந்த முருகன், பிரேமன், தாஸ் ஆகியோருக்கும் நூற்றுக்கும் மேற்பட்ட வாழை மரங்கள் காற்றில் சேதமடைந்தன. கடையாலுமூட்டில் இருந்து பேச்சிப்பாறை செல்லும் வழியில் ஆம்பாடி சுற்றுவட்டாரப் பகுதிகளில் வீசிய பலத்த காற்றில் ரப்பர் மரங்கள் வேரோடு சாய்ந்து மின் கம்பங்களின் மீது விழுந்தன.

இதில், பத்திற்கும் மேற்பட்ட மின் கம்பங்கள் ரோட்டில் சாய்ந்தன. இதனால், கடையாலுமூட்டில் இருந்து பேச்சிப்பாறை செல்லும் ரோட்டில் வாகன போக்குவரத்து முற்றிலும் தடைபட்டது. மேலும், ஆம்பாடி சுற்றுவட்டாரப் பகுதிகளில் நேற்று மின்சாரம் முழுவதுமாக தடைபட்டது. மழையின் காரணமாக குமரியில் நிலவிவந்த வெப்பம் சற்றே தணிந்து குளிர்காற்று வீசத்துவங்கி உள்ளது.

மார்த்தாண்டம்

மார்த்தாண்டத்தில் கடும் கோடை வெப்பம் நிலவி வந்த நேரத்தில், நேற்று மாலை திடீரென சாரல் மழை பெய்தது. இதைத்தொடர்ந்து, வெப்பம் சற்றே தணிந்தது.

## தமிழகம், கேரளாவில் முட்டை விலை 260 காசாக நிர்ணயம்

நாமக்கல்: தமிழகம், கேரளாவில், முட்டை விலை, 260 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர் சரிவால், பண்ணையாளர்கள் கவலையடைந்துள்ளனர்.நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம், நேற்று நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து, பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 270 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, பத்து காசுகள் சரிந்து, 260 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது. முட்டை விலையில் ஏற்பட்டுள்ள தொடர் சரிவு, பண்ணையாளர்களை கவலையடையச் செய்துள்ளது.நாட்டின் பிற மண்டலங்களில், முட்டை விலை (காசுகளில்) நிலவரம்:சென்னை, 300, பெங்களூரு, 260, மைசூரு, 255, ஹைதராபாத், 215, மும்பை, 252, விஜயவாடா, 215, கோல்கத்தா, 255, பர்வாலா, 208, டில்லி, 220.இவ்வாறு நிர்ணயம்

செய்யப்பட்டுள்ளது.நாமக்கல்லில், நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 55 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 61 ரூபாயாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

### வறட்சியால் பட்டுக்கூடு உற்பத்தி... நீரின்றி காய்ந்த மல்பெரி செடிகள்

கோபிசெட்டிபாளையம்: கோபி பகுதிகளில், கடுமையான வறட்சி, நிலத்தடி நீர்மட்டம் அதளபாதளத்துக்கு சென்றதால் போதிய தண்ணீரின்றி மல்பெரி செடிகள் காய்ந்ததால், பட்டுக்கூடு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.ஈரோடு மாவட்டத்தில் கோபி பகுதிகளில் அதிக விவசாயிகள் உள்ளனர். பவானிசாகர் அணையில் இருந்து வரும், எல்.பி.பி., வாய்க்கால், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை வாய்க்கால் ஆகியவற்றின் மூலம் லட்சக்கணக்கான ஏக்கரில் நெல், வாழை, கரும்பு, மஞ்சள் மற்றும் மல்பெரி செடிகள், காய்கறிகளும் அதிகளவில் விளைவிக்கப்படுகிறது.வாய்க்கால் பாசனம் ஒரு பக்கம் இருந்தாலும், கிணற்று நீர் பாசனமும் அதிகளவில் உள்ளது. பருவமழை நிலத்தடி நீர்மட்டம், "கிடுகிடு' என குறைந்து கொண்டே செல்கிறது. விவசாயத்துக்கு போதுமான நீரை பயன்படுத்தும் வகையில் சொட்டு நீர் பாசனம் கடைப்பிடிக்கப்படுகிறது.பவானிசாகர் அணையில் இருந்து எல்.பி.பி., மற்றும் தடப்பள்ளி, அரக்கன்கோட்டை பாசனத்தில் தண்ணீர் திறப்பு நிறுத்தப்பட்டுள்ளதால், கிணற்று நீர் பாசனத்தை நம்பியே விவசாயிகள் உள்ளனர். மின்தடையால் விவசாயத்தொழில் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.ஈரோடு மாவட்டத்தில் கோபி, கவுந்தப்பாடி உள்ளிட்ட இடங்களில், 1,200 ஹெக்டரில் மல்பெரி வளர்க்கப்படுகின்றன. ஒரு லட்சத்து, 20 ஆயிரம் கிலோ வரை பட்டுகூடு உற்பத்தி செய்யப்படுகிறது. வறட்சியால் பல இடங்களில் மல்பெரி செடி வளர்க்க முடியாத நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். மல்பெரி செடிகள் காய்ந்து போனதால், பட்டு கூடு உற்பத்தியும், 30 சதவீதம் வரை பாதிக்கப்பட்டுள்ளது.விவசாயிகள் கூறியதாவது: கோபி சுற்று வட்டாரத்தில் பாசனப்பகுதியில், நெல், வாழை, மஞ்சள் அதிகளவில் பயிரிடப்பட்டன. பருவமழை ஏமாற்றியதாலும், வாழை, மஞ்சள் விலை தொடர்ந்து சரிந்து வருவதால், மாற்று பயிர்களுக்கு விவசாயிகள் மாறி வருகின்றனர்.கோபி சுற்று வட்டாரத்தில் 1,200 ஹெக்டரில் மல்பெரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தண்ணீர் பற்றாக்குறையால் மல்பெரி செடிகளுக்கு சொட்டு நீர் பாசனம் கடைபிடிக்கப்பட்டது. அடிக்கடி ஏற்படும் மின்தடையால், போதிய தண்ணீர் பாய்ச்ச முடியாத சூழ்நிலை உள்ளது. நீர் இல்லாததால், மல்பெரி செடிகளை காப்பாற்ற முடியாமல் காய்ந்து

விட்டது. பட்டு கூடு உற்பத்தியை நிறுத்திவிட்டோம். ஈரோடு மாவட்டத்தில், 30 சதவீதம் வரை பட்டு கூடு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது, என்றார்.

## குண்டு மல்லி விலை சரிவு: பூ வியாபாரிகள் கவலை

ஈரோடு: சித்திரை மாதத்தில் விசேஷ நாட்கள் இல்லாததால், ஈரோட்டில் பூக்களின் விலை கடும் சரிவை சந்தித்துள்ளது. குண்டு மல்லி கிலோ, 70 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.ஈரோடு நகரில் பஸ் ஸ்டாண்ட், நேதாஜி மார்க்கெட், பி.எஸ். பார்க், சின்ன மார்க்கெட் ஆகிய இடங்களில், 20க்கும் மேற்பட்ட மொத்த வியாபார பூக்கடைகள் அமைந்துள்ளன.ஊட்டி, மேட்டுப்பாளையம், ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களில் இருந்து, ரோஸ், பட்டன் ரோஸ் ஆகிய பூக்களும், சேலம் மார்க்கெட், திண்டுக்கல் மாவட்டம் நிலக்கோட்டை, சத்தியமங்கலத்தில் இருந்து, மல்லி, முல்லை, கனகாம்பரம், செவ்வந்தி, கோழிக்கொண்டை, அரளி, சம்பங்கி ஆகியவை விற்பனைக்கு வருகிறது.நாளென்றுக்கு, மூன்று டன் பூக்கள், ஈரோட்டுக்கு விற்பனைக்கு வருகிறது. கடந்த நான்கு நாட்களாக, பூக்களின் விலை தொடர் சரிவை சந்தித்துள்ளது. ஈரோட்டில் நேற்று காலை, கிலோ 70 ரூபாய்க்கு விற்ற குண்டு மல்லி, மாலையில், 50 ரூபாய்க்கு விற்பனையானது. பூக்கள் விலை தொடர் சரிவை நோக்கி செல்வதால், பூ வியாபாரிகள் கவலையில் உள்ளனர்.இதுகுறித்து பஸ் ஸ்டாண்ட் நாச்சியப்பா வீதி பூ கமிஷன் மண்டி நாகராஜன் கூறியதாவது,சித்திரை முதல்நாள் விஷூ பண்டிகையின் போது, பூக்களின் தேவை அதிகரித்து விலையும் உச்சத்தை தொட்டது. தொடர்ந்து வந்த நாட்களில், வெயிலால் பூக்களின் உற்பத்தி உயர்ந்துள்ளது. ஈரோட்டிற்கு இரண்டு டன் பூக்கள் கூடுதலாக விற்பனைக்கு வருகிறது. சித்திரை மாதம் விசேஷ நாட்கள், உள்ளூர் பண்டிகை இல்லாததால் மக்கள் பூ வாங்கும் அளவு குறைந்து, விலை சரிந்துள்ளது.இன்று (நேற்று) மல்லிகைபூ கிலோ, 70 ரூபாய்க்கும், முல்லை கிலோ, 140 ரூபாய், கனகாம்பரம் கிலோ, 180 ரூபாய், அரளி கிலோ, 60 ரூபாய், சம்பங்கி கிலோ, 60 ரூபாய், பட்டு (கோழிக்கொண்டை) கிலோ, 80 ரூபாய், கலர் சென்டு கிலோ, 70 ரூபாய்க்கு விற்பனையானது.காலையில் இருக்கும் விலையை விட, மாலையில் பூக்களின் விலை அதளபாதாளத்துக்கு குறைந்து விடும்.பஸ் பிரச்னையால் கூடுதல் கட்டணம் கொடுத்து பூக்களை விற்பனைக்கு கொண்டுவந்தும், விலை வீழ்ச்சியால் நஷ்டம் தான் ஏற்படுகிறது.தவிர, கடும் வெயிலால் பூக்கள் வாடி வீணாகிறது. வைகாசி மாதம் முகூர்த்தம் துவங்கினால், பூக்களின் விற்பனை அதிகரிக்க வாய்ப்புள்ளது, என்றார்.

## காய்கறி கண்காட்சியில் கூடுதல் வருவாய்.

கோத்தகிரி:கோத்தகிரியில் நடந்த காய்கறி கண்காட்சியை 17 ஆயிரத்து 747 பேர் கண்டுகளித்துள்ளனர்.கோடை விழாவின் முதல் நிகழ்ச்சியாக, ஆறாவது காய்கறி கண்காட்சி நேரு பூங்காவில் நடத்தப்பட்டது. இரண்டு நாட்கள் நடந்த கண்காட்சியில், பெரியவர்கள் 13 ஆயிரத்து 542 பேரும், சிறுவர்கள் 4,205 பேர் என, மொத்தம் 17 ஆயிரத்து 747 பார்வையாளர்கள் கண்காட்சியை கண்டுக்களித்துள்ளனர். இதன் மூலம். மொத்தம் 3 லட்சத்து 4355 ரூபாய் அரசுக்கு வருவாய் கிடைத்துள்ளது. கடந்த ஆண்டை காட்டிலும், கூடுதலாக 52 ஆயிரத்து 665 ரூபாய் வருவாய் கிடைத்துள்ளது. கோத்தகிரி தோட்டக்கலை துறை உதவி இயக்குனர் ராஜேந்திரன் கூறுகையில், ""கடந்த ஆண்டை காட்டிலும் நடப்பாண்டு, கூடுதலாக 3,731 பார்வையா ளர்கள் கண்காட்சியை கண்டுக்களித்துள்ளனர். வரும் ஆண்டுகளில் காய்கறி கண்காட்சியை சிறப்பாக நடத்தி, சுற்றுலாப் பயணிகள் உட்பட உள்ளூர் பார்வையாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்," என்றார்.

## சொட்டுநீர் பாசனத்தில் காய்கறி சாகுபடி: அசத்தும் சித்தாமூர் விவசாயி

மதுராந்தகம்:சொட்டுநீர் பாசனத்தின் மூலம் புடலங்காய், பாகற்காய், கத்தரி, உள்ளிட்ட காய்கறிகளை பயிர் செய்து, அதிக மக‹லை ஈட்டி வருகிறார் சித்தாமூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி ஒருவர்.பளுசுமையை குறைக்க, சொட்டுநீர் பாசன திட்டத்தை அதிகம் விரும்புவதாக, சித்தாமூர் மக்கள் தெவித்துள்ளனர். பாசன நீரை அதிகம் சேமிப்பது, வேலை ஆட்கள் குறைப்பு, விவசாயத்தில் அதிக மக‹ல், தரமான காய்கறிகளை உற்பத்தி உள்ளிட்ட அனைத்து வசதிகளுக்கு, சொட்டு நீர் பாசன திட்டம் மிகவும் அத்தியாவசிய ஒன்றாக கருதப்படுகிறது.காய்கறி சாகுபடிஇத்திட்டத்தை கையாளும் ஒரு சில விவசாயிகள், தாங்கள் பயிரிடும் காய்கறிகள் உற்பத்தி மூலம், அதிக லாபத்தை ஈட்டுகின்றனர். வேடந்தாங்கல், கரிக்கிலி கிராமத்தை சேர்ந்த விவசாயிகள், பெரும்பாலானோர் சொட்டு நீர் பாசன திட்டத்தின் மூலம் காய்கறிகள், கரும்பு, மா, தென்னை ஆகியவற்றை சாகுபடி செய்து வருகின்றனர்.கரிக்கிலி ஊராட்சிக்கு உட்பட்ட சித்தாமூர் பகுதியில், 4 ஏக்கர் பரப்பளவில் சொட்டு நீர் பாசனத்தின் மூலம் பல வகை காய்கறிகளை விவசாயி சுரேஷ் என்பவர் பயிர் செய்து வருகிறார். புடலங்காய், பாகற்காய், கத்தரிகாய், சுரைக்காய், கோவக்காய், வெண்டை, பீர்க்கன்காய் உள்ளிட்ட காய்கறிகளை எளிய முறையில், பயிர் செய்து வருகிறார்.நல்ல லாபம்இதுகுறித்து, சுரேஷ் கூறியதாவது:நான் கடந்த 25 ஆண்டுகளாக எனக்கு சொந்தமான நிலத்தில், பல வகையான காய்கறிகளை பயிர் செய்து வருகிறேன். கூலி ஆட்களை அதிகமாக வைத்து, நீர் பாய்ச்ச வேண்டியிருந்தது. தண்ணீர்

அதிகமானால் காய்களின் சுவை மாறிவிடும். பல காய்கள் அழுகி போய்விடும். இதனால் நான் பெரும் நஷ்டத்தை சந்தித்துள்ளேன். கடந்த 5 ஆண்டுகளாக நான் சொட்டு நீர் பாசனத்தின் மூலம் பயிர் செய்து வருகிறேன். இதனால் வேலையாட்கள் பளு குறைந்தது. மேலும் பயிர்களுக்கு சீரான தண்ணீர் கிடைப்பதால், காய்கறிகளின் தரம் நன்றாகவும், சுவையாகவும் உள்ளது. அறுவடை செய்யப்படும் காய்கறிகள், தி.நகர், கோயம்பேடு உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பப்படுகின்றன. இதன் மூலம் தினமும் 4,000 ரூபாய் கிடைக்கிறது.இவ்வாறு, சுரேஷ் தெரிவித்தார்.

## வெப்பத்தை சமாளிக்க தென்னங்கீற்று கூரை

அவலூர்பேட்டை:கோடை வெயிலை சமாளிக்க கடைகளில் தென்னங்கீற்று கூரை அமைத்துள்ளனர்.அவலூர்பேட்டை பகுதியில் பரவலாக மழை பொழியாத நிலையில் கடும் வெப்பம் நிலவுகிறது. தற்போது கத்திரி வெயில் துவங்கியுள்ளதால் வியாபாரிகள் கடைகளில் அமர்ந்து தொழில் செய்ய அவதிப்படுகின்றனர்.

கடும் வெப்பத்தினால் பொதுமக்களும் பகல் நேரத்தில் வெளியில் வருவது குறைந்து போனது. இதனால் கடைவீதி பரபரப்பில்லாமல் காணப்

படுகிறது.சிலர் கடைகளின் உள்ளே தெர்மாகூல் எனும் ஷீட் மற்றும் ஏ.சி., அமைக்கின்றனர். சிலர் இரும்பு ஷீட் டாப்பின் மேல்பகுதியில் ஜம்பு, கீற்று ஆகியவற்றை நிரவி தண்ணீர் தெளித்துவிடுகின்றனர்.இதற்கிடையே, அவலூர்பேட்டை சேத்பட் சாலையில் கடைக்கு வெளியே உள்ள டாப்பிற்கும் மேல் தென்னங்கீற்றினால் கூடுதலாக கூரை அமைத்து வெப்பத்திலிருந்து தப்பிக்க வழி முயற்சி மேற்கொண்டுள்ளனர்.

## எள் விளைச்சல் உயர்ந்ததால் விலை அதிரடி வீழ்ச்சி

திருக்கோவிலூர்:திருக்கோவிலூர் கமிட்டிக்கு எள் வரத்து அதிகரித்து, விலை வீழ்ச்சியடைந்ததால், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.கடந்த ஆண்டு தானே புயலைத் தொடர்ந்து எள் விளைச்சல் வீழ்ச்சியை கண்டது. இதனால் கடந்த ஆண்டு 80 கிலோ கொண்ட ஒரு மூட்டை எள் 9,000 ரூபாய் வரை விலை போனது. கடந்த மார்ச் மாதம் வரை இந்த விலை நீடித்தது.இதனால் மகிழ்ச்சியடைந்த விவசாயிகள் இந்தாண்டு ஒட்டுமொத்தமாக எள் பயிர் செய்யத் துவங்கினர். கரும்பு பயிரிடுவதைக்கூட நிறுத்திவிட்டு, கிணற்று நீர்பாசனம் மட்டுமல்லாது மானாவாரி நிலத்திலும் எள் பயிரிடப்பட்டது.கடந்த 10 நாட்களாக எள் அறுவடை செய்யப்பட்டு வரும் நிலையில், நேற்று உச்ச கட்டமாக 1,100 மூட்டை எள், திருக்கோவிலூர் மார்க்கெட் கமிட்டிக்கு ஏலத்திற்கு கொண்டு வரப்பட்டது. இதனால் எள் விலை வீழ்ச்சி ஏற்பட்டது.நேற்று ஒரு மூட்டை

எள் அதிகபட்சமாக 6,007 ரூபாய், குறைந்தபட்சமாக 5,177 ரூபாய் என கொள்முதல் செய்யப்பட்டது. பிரபல எண்ணெய் நிறுவனத்தினர் அதிகளவு எள் கொள்முதல் செய்ததால் விலை வீழ்ச்சி சற்று நிதானமாக இருந்தது. தொடர்ந்து வரும் நாட்களில் ஒரு மூட்டைக்கு ஆயிரம் ரூபாய் வரை விலை வீழ்ச்சி ஏற்படக்கூடும் என்ற தகவலால் விவசாயிகள் தரப்பில் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.ஒட்டுமொத்தமாக எள் விளைச்சலுக்கு விவசாயிகள் மாறியதும், எள் விளைச்சல் சிறப்பாக இருந்ததுமே, விலை வீழ்ச்சிக்கு காரணம் என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

## 3 எலுமிச்சை பழம் ரூ.7,500க்கு ஏலம்

ப.வேலூர்: கலசத்தில் வைக்கப்பட்ட மூன்று எலுமிச்சை பழங்களை, கரூர் மாவட்டத்தை சேர்ந்த பக்தர்கள், 7,500 ரூபாய்க்கு ஏலம் எடுத்தனர்.ப.வேலூர் அடுத்த படமுடிபாளையம் தங்காயி கோவிலில், ஆண்டு தோறும், பொன்னர் சங்கர் கதைபாட்டு நடப்பது வழக்கம். அதேபோல், இந்த ஆண்டும், கடந்த ஒரு மாதமாக, கதை பாட்டு நடந்தது கடந்த, 4ம் தேதி இரவு படுகளமும், மறுநாள் பகல், 12 மணிக்கு, கம்பம் பிடுங்கும் நிகழ்ச்சியும் நடந்தது.அன்று நள்ளிரவு, 12 மணிக்கு, கலசத்தில் வைக்கப்பட்டிருந்த மூன்று எலுமிச்சை பழங்கள் ஏலம் விடப்பட்டது. இந்த கலசத்தில் வைக்கப்பட்ட எலுமிச்சை பழத்தை ஏலம் எடுத்து, தங்களது வீட்டில் வைத்தால், நன்மை பயக்கும் என்பது ஐதீகம். ஏலத்தில், ஏராளமான பக்தர்கள் பங்கேற்றனர்.மூன்று எலுமிச்சை பழங்கள், 7,500 ரூபாய்க்கு ஏலம் போனது. அவற்றை, கரூர் மாவட்டத்தை சேர்ந்த மூன்று பக்தர்கள், போட்டி போட்டு ஏலம் எடுத்தனர்.

<u>விவசாய மலர் செய்தி</u>

## அரசு பண்ணையில் ரூ.5க்கு ரோஜா செடி மானிய விலையில் பழக்கன்றுகள்

மேலூர் அருகே அரசு பண்ணையில் அலங்கார பூச்செடிகள் ரூ. 5க்கும், ஒட்டு ரக வீரிய பழக்கன்றுகள் ரூ.20க்கும் மானியத்தில் கிடைக்கிறது. ""ஏக்கர் கணக்கில் பழக்கன்றுகளை நடவு செய்ய விரும்புவர்களும் இப்பண்ணையை அணுகலாம்," என அதிகாரிகள் தெரிவித்தனர். மேலூர் பூஞ்சுத்தியில் சமுதாய நாற்றங்கால் பண்ணை 15 ஆண்டுகளாக செயல்படுகிறது. இவ்விடத்தை தோட்டக்கலை துறை கடந்த 5 மாதங்களுக்கு முன்பு தன் வசப்படுத்தி, அரசு பண்ணை அமைத்தது. மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள இந்த ஒரே பண்ணையின் அலுவலராக பிரபா மற்றும் உதவியாளர்கள் உள்ளனர். 15 ஏக்கர் பரப்பளவில் ஒட்டு ரக மா, நெல்லி, எலுமிச்சை, கொய்யா, சப்போட்டா கன்றுகளும், சவுக்கு, தேக்கு மரக்கன்றுகளும், ரோஜா, அரளி உட்பட அலங்கார பூச்செடிகள், மூலிகை செடிகள் இங்கு உற்பத்தி செய்யப்படுகிறது.

**உதவி வேளாண் அலுவலர் நாகராஜன் கூறியதாவது:** இங்கு பழக்கன்றுகளை விதை போட்டு உற்பத்தி செய்து, செடி பென்சில் அளவு வளர்ந்த உடன் உயர்ரக மரக்கன்றுடன் சேர்த்து பிளாஸ்டிக் கவர் மூலம் கட்டி விடுவோம். கீழ் செடியில் வளரும் சிம்புகளை தொடர்ந்து உதிர்த்துவிட்டு, ஒட்டு சேர்த்த மேல் பகுதியை மட்டும் வளர விடுவோம். இதனால் இது மரமாகி காய்க்கும் போது அதிக பலனை குறைந்த காலத்திலேயே கொடுக்கும். இப் பணியை தொழில் நுட்பம் தெரிந்தவர்கள் மட்டுமே செய்ய முடியும். தருமபுரியில் இருந்து வரும் நபர்கள் இப்பணியை இங்கு செய்கின்றனர். அவர்களுக்கு செடி ஒன்றுக்கு ரூ.2.50 கூலியாக தருகிறோம். நெல்லி, சப்போட்டா, எலுமிச்சை போன்ற பழ மரக் கன்றுகளை ஏக்கருக்கு 100 வரை நடவு செய்யலாம். மா மரக்கன்றுகளை ஏக்கருக்கு 40 மட்டும் நடவு செய்ய வேண்டும். 5 மீட்டர் இடைவெளியில் கன்றுகளை நடவு செய்ய வேண்டும். ஒரே ஆண்டில் பூத்து காய்த்துவிடும். அவற்றை உதிர்த்து விட்டு, மறு ஆண்டு முதல் பலனை எடுக்கலாம்.

அரசு பண்ணையில், இந்த ஆண்டு ஒரு லட்சம் மரக் கன்றுகளை உற்பத்தி செய்வதாக இலக்கு நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது, என்றார். வயலில் மரக்கன்றுகளை நடவு செய்யவோ, பூச்செடிகள் வாங்கவோ விரும்புகிறவர்கள் 98941 05744, 97866 16518ல் தொடர்பு கொள்ளலாம்.

## நவீன தொழில்நுட்பம்

மஞ்சள் நாற்றங்கால் உற்பத்தி - உழவரின் புதிய முயற்சி: தும்பர் கிராமத்தைச் சேர்ந்த பாஸ்கர் என்ற உழவர் சேலம் மாவட்டம் அந்தியூர் வேளாண்மை அறிவியல் நிலையம், விஞ்ஞானிகளின் பரிந்துரையின் பெயரில் சென்ற வருடம் குழித்தட்டு முறையில் மஞ்சளில் நாற்றங்கால் உற்பத்தி செய்து சாகுபடியும் செய்துள்ளார்.

தரமான விதைக் கிழங்குகளை ஒவ்வொன்றும் 20-35 கிராம் இருக்குமாறு தேர்வுசெய்து, ஒரு கிலோவிற்கு 30-50 விதை கிழங்குகள் தயாரிக்கப் பட்டது. ஒவ்வொரு விதைக்கிழங்கிலும் 10 வளையங்கள் இருக்கும் விதைக்கிழங்குகளை 3-4 துண்டுகளாக வெட்டி ஒவ்வொரு துண்டிலும் இரு வளையங்கள் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். ஒரு ஏக்கருக்கு 22,000 துண்டுகள் தேவைப்பட்டன. ஒரு ஏக்கருக்கு விதைக்கிழங்கு 180 கிலோ முதல் 200 கிலோ இருந்தால் போதுமானது. சாதாரண முறையைக் காட்டிலும் குழித்தட்டு முறையில் விதைக் கிழங்கின் அளவு நான்குமடங்கு குறைகிறது.

இயற்கை பூசணக்கொல்லி மூலம் விதைநேர்த்தி செய்துள்ளார். பரிந்துரைக்கப்பட்ட பூசணக்கொல்லி ஒரு கிராம், பூச்சிக்கொல்லி 2 மிலி, யூரியா 5 கிராம் ஆகியவற்றை ஒரு லிட்டர் நீரில் கலந்து அதில் 20 நிமிடங்கள் விதைக்கிழங்குகளை ஊறவைத்து, காற்றுப்புகா சாக்குப்பையில் விதைக்கிழங்குகளை இட்டு நிரப்பி வெப்பத்தை ஏற்படுத்த 8 நாட்கள் வரை வைத்திருந்தார். இதனால் முளைப்புத்திறன் அதிகரித்தது. பின் சிறிது முளைத்த விதைக் கிழங்குகளை குழியில் இட்டு தேங்காய் நார்க் கழிவுகளைக் கொண்டு குழிகளை நிரப்பி,

குழித்தட்டுக்களை 40-45 நாட்கள் வரை நிழல்வலை குடிலில் வைத்து பராமரித்துள்ளார். 40 நாட்களுக்குப் பின் வயலில் நாற்றுக்களை நடவு செய்துள்ளார். வரிசைக்கு வரிசை 40 செ.மீ. இடைவெளி வீதம் செடிக்குச்செடி 30 செ.மீ. இடைவெளி இருக்குமாறு செய்தார். மூன்று நாட்களுக்குஒரு முறை நீர்ப்பாசனம் செய்தார். பூச்சி நோய் தாக்குதலிலிருந்து பயிரைப் பாதுகாக்க இயற்கை, ரசாயன வேளாண் உத்திகளை கையாண்டார். ஒரு ஏக்கருக்கு 25 குவிண்டால்(உலர் எடை) மஞ்சள் விளைச்சல் கிடைத்துள்ளது.
குழித்தட்டு நாற்றங்கால் பயன்கள் பற்றி குறிப்பிடும்போது, ஆரோக்கியமான விதை மூலம் நாற்று உற்பத்தி செய்ய முடிந்தது; மண்ணின் வளம் மேம்பட்டு நீண்டநாள் சத்துக்களை கிரகித்து வைக்கிறது. விதை உபகரணங்களின் தேவை குறைந்தது. இதனால் பொருளாதாரம் மேம்பட்டது. சாதாரண முறை அளவே விளைச்சல் இல்லாததாலும், விதையின் அளவு அதற்குண்டான செலவும் குறைந்தது. இதில் 100 சதம் நடவு செய்த அனைத்து செடிகளும் வேர்பிடித்து விளைச்சலுக்கு வந்தது. வயல் செலவு, களைக்கொல்லி செலவு குறைந்தது. நாற்று நடவு செய்து அறுவடை வரை ஒரு மாதம் வயலில் பயிர் வயது குறைகிறது. இந்த தொழில்நுட்பத்தை வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆராய்ச்சியின் மூலம் துல்லியமாகச் செய்வதற்கு வழிவகுக்குமாயின் மஞ்சள் சாகுபடியில் இந்த முறை மிகப்பெரிய திருப்பத்தை ஏற்படுத்தும் என்றார் அனுபவ விவசாயி. (தகவல்: முனைவர் செ.மாணிக்கம், முனைவர் பெ.ச.கவிதா, முனைவர் ம.அ.வெண்ணிலா, 0427-242 2550)
**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்**

## நெல் விதைநேர்த்தி

நெல் விவசாயி எ.எஸ். தர்மராஜன் நெல் விவசாயத்தில் பாரம்பரிய முறைகளை அனுசரிப்பதில் மிகுந்த அக்கறை உள்ளவர். இன்று நெல் விவசாயம் செய்பவர்கள் பலருக்கு இவரை நன்றாகத் தெரியும். தற்போது நெல் விதை நேர்த்தியை செய்வதில் மிகவும் ஆர்வம் உள்ளவராக இருக்கின்றார். இவர் பல நெல் ரகங்களை சாகுபடி செய்து பயன் அடைந்து விவசாயிகளுக்கு சிபாரிசு செய்துள்ளார். அவர் விதை நேர்த்தியில் தனக்குத் தெரிந்த விஞ்ஞானத்தை விளக்கு கிறார். அதோடு அமாவாசை வேளையில் நெல் விதைப்பினை எப்படி செய்யலாம் என்று யோசனைகள் தெரிவிக்கின்றார்.
தற்போது பாரம்பரிய நெல் விதை நேர்த்தியைப் பார்ப்போம். 30 கிலோ நெல் விதையை ஒரு பாத்திரம் அல்லது டிரம்மில் 18 மணி நேரத்திற்கு ஊறவிட வேண்டும். அதன் பிறகு ஒரு சாக்கை எடுத்து ஒரு கிலோ வீதம் வாதநாராயணன் மற்றும் குப்பைமேனி இலைகளை சாக்கின் அடியில் பரப்பவும். இந்த அடுக்கின் மேல் காய்ந்த பசுமாட்டு சாணத்தை பரப்பவும். ஊறவைத்த நெல்லை இதன்மேல் கொட்டவும். சாக்கில் நான்கில் மூன்று பகுதி அளவு வரை நெல்லை நிரப்பி, இந்த நெல் விதைகளுக்கு மேல் மீண்டும் காய்ந்த சாணத்தை வைக்க வேண் டும். இதற்கு மேல் மீண்டும் ஒரு முறை ஏற்கனவே சாக்கின் அடிப் பகுதியில்இட்டதுபோலஒருகிலோ வீதம் வாதநாராயணன்

மற்றும் குப்பைமேனி இலைகளை பரப்ப வேண்டும். அதன்பிறகு சாக்கை மூடி கயிற்றில் கட்டி பாரம் வைத்து 24 மணி நேரம் அப்படியே வைத்து இருக்க வேண்டும். அதன்பிறகு சாக்கை அவிழ்த்து முளை விட்டிருக்கும் நெல் விதைகளை எடுத்து நமது தேவைக்கு ஏற்றவாறு நாற்றங்காலில் விதைக்கலாம். இம்

முறையை பின்பற்றுவதால் நாம் வழக்கமாக விதை நேர்த்தி செய்து விதைக்கப்பட்ட நெல்லைவிட நெல் விதைகள் விரைவாக, அதிகமாக முளைப்பது மட்டுமன்றி செம்புள்ளி நோயை எதிர்த்து வளரும் திறனுடையதாகவும் அமைகிறது. மேலும் இம்

முறைப்படி விதைநேர்த்தி செய்யப் பட்ட நெல் பயிரிலிருந்து அதிக அளவு நெல்மணிகள் கிடைக்கின் றன. இவ்விதைநேர்த்தி செய்யப் பட்ட நெல் பயிரிலிருந்தும் இம்முறை விதைநேர்த்தி செய்யப்படாத வெள்ளைப் பொன்னி நெற்பயிரிலிருந்தும் கிடைத்த நெல்மணிகளை ஆய்வு செய்ததில் இம் முறைப்படி விதைநேர்த்தி செய்யப் பட்ட நெற்கதிரில் 250க்கு மேல் நெல்மணிகள் உண்டாகி இருந்தது. பொதுவாக வெள்ளைப்பொன்னியில் ஒரு கதிரில் 145 நெல் மணிகள் மட்டுமே பிடித்திருக்கும்.

நெல் விவசாயத்தில் அமாவாசை நேரத்தில் என்ன செய்ய வேண்டும் என்பதையும் விளக்குகிறார். அமாவாசைக்கு 48 மணி நேரம் முன்பு விதைப்பு செய்தல் மிகவும் முக்கியமானது. பூமிக்கு அருகில் உள்ள நிலா நாள் விதைப்பதைத் தவிர்க்க வேண்டும். பூமிக்குத் தொலைவில் உள்ள நிலா நாள் விதைப்பது மிகவும் நல்லது.

**-எஸ்.எஸ்.நாகராஜன்**

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

7.05.2013 A.M

---

## வறட்சி பாதித்த மாவட்டங்களில் மத்திய குழுவினர் இன்று முதல் கள ஆய்வு தொடங்குகின்றனர்



திருச்சி : வறட்சி பாதித்த மாவட்டங்களுக்கு ரூ.19,665 கோடி நிவாரண நிதி தர மத்திய அரசுக்கு தமிழக அரசு கோரிக்கை அனுப்பியிருந்தது. இதைதொடர்ந்து மத்திய நிபுணர் குழு தமிழகத்தில் ஆய்வு மேற்கொள்ள உள்ளது. சிறு விவசாயிகள் வேளாண் வணிகக் கூட்டமைப்பு நிர்வாக இயக்குநர் பர்வேஷ் சர்மா தலைமையில் வரும் மதழ்தியக்குழு இரண்டு பிரிவாக பிரிந்து ஆய்வு பணியை நடத்த உள்ளது. முதல் குழுவுக்கு பர்வேஷ் சர்மாவும், 2வது குழுவுக்கு மத்திய திட்டக்குழு வேளாண் பிரிவு துணை ஆலோசகர் மானேஷ் சவுத்ரியும் தலைமை வகிப்பார்கள்.

காவிரி டெல்டாவில் ஒரு குழுவும், காவிரி டெல்டா அல்லாத பகுதிகளில் மற்றொரு குழுவும் ஆய்வு நடத்தும். முதல் குழுவினர் மதுரையிலும், 2வது குழுவினர் திருச்சியிலும் முகாமிட்டு ஆய்வு செய்வார்கள். திருச்சியில் முகாமிடும் 2வது குழுவினர் திருச்சி, தஞ்சை, திருவாரூர், நாகை, புதுகை ஆகிய மாவட்டங்களில் கள ஆய்வை இன்று முதல் தொடங்குகின்றனர்.

மானேஷ் சவுத்ரி தலைமையிலான இக்குழுவில் புகையிலை மேம்பாட்டுக்கழக இயக்குநர் மனோகரன், மத்திய அரசின் நிதித்துறை துணை இயக்குநர் ஸ்ரீகாந்த், மின்சாரத்துறை துணை செயலர் ஜோஷ், காவிரி மற்றும் தென்னக நதிகள் அமைப்பின் கண்காணிப்பு பொறியாளர் சுந்தரமூர்த்தி ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

திருச்சி மன்னார்புரம் விருந்தினர் மாளிகையில் இக்குழுவினர் தங்குகின்றனர். முதல் கட்டமாக இன்று காலை இக்குழு திருச்சியில் கலந்தாலோசனை நடத்திய பின்பு களஆய்வை தொடங்குகிறது. 2 நாட்கள் ஆய்வு பணிகளை மேற்கொள்ள உள்ளனர். புதன்கிழமை இரவு சென்னை திரும்புகின்றனர். 9ம் தேதி காலை முதல்வருடன் ஆலோசனை நடத்தி டெல்லி புறப்பட உள்ளதாக கலெக்டர் அலுவலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## பாசிப்பருப்பு விலை கடும் உயர்வு பாமாயில் டின்னுக்கு ரூ.15 சரிவு



விருதுநகர் : தஞ்சாவூரில் இருந்து பாசிப்பயறு வரத்து நின்று விட்டதால் மூட்டைக்கு ரூ.300 உயர்ந்துள்ளது. விருதுநகர் சந்தையில், தஞ்சை பாசிப்பயறு ரூ.4,800ல் இருந்து ரூ.5,100 ஆகவும், கோவில்பட்டி பாசிப்பயறு ரூ.5,500ல் இருந்து ரூ.5,800 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. நாடு பாசிப்பயறு ரூ.5,200ல் இருந்து ரூ.5,500 ஆகவும், இறக்குமதி பாசிப்பயறு ரூ.5,400ல் இருந்து ரூ.5,700 ஆகவும் விலை உயர்ந்துள்ளது. பாசிப்பருப்பு லயன் ரூ.7,500ல் இருந்து ரூ.7,800 ஆகவும், பாசிப்பருப்பு தஞ்சை ரூ.7,200ல் இருந்து ரூ.7,500 ஆகவும் விற்கப்படுகிறது.

டாலருக்கு நிகரான இந்திய ரூபாய் மதிப்பு உயர்ந்துள்ளதாலும், மலேசியாவில் பாமாயில் உற்பத்தி அதிகரித்துள்ளதாலும் பாமாயில் (15 கிலோ) டின்னுக்கு ரூ.15 குறைந்துள்ளது. பாமாயில் ரூ.815லிருந்து ரூ.800 ஆக சரிந்துள்ளது. மேலும் நிலக்கடலை பருப்பு ஏற்றுமதி விதிகளில் மாற்றம் செய்யப்பட்டதால் ஏற்றுமதி நின்றுபோனது. கடந்த சில வாரங்களாக நிலக்கடலை பருப்பு விலையும் குறைந்து வருகிறது. (80 கிலோ) ரூ.4 ஆயிரத்து 800லிருந்து ரூ.4,750 ஆக குறைந்துள்ளது.

இதனால் கடலைப் புண்ணாக்கு (100 கிலோ) மூட்டை ரூ.3 ஆயிரத்து 750லிருந்து ரூ.3,700 என குறைந்துள்ளது. கடலை எண்ணெய் உற்பத்தியாளர்களிடம் கூடுதல் விலைக்கு கொள்முதல் செய்யப்பட்ட நிலக்கடலைப் இருப்பு அதிகம் இருப்பதால் கடலை எண்ணெய் விலை குறையவில்லை. ஆந்திராவில் குண்டூர் வத்தல் தினசரி மார்க்கெட்டிற்கு 50 ஆயிரம் மூட்டைகளில் இருந்து 20 ஆயிரம் மூட்டையாக சரிந்துள்ளது. குண்டூர் மார்க்கெட்டிற்கு தரமற்ற வத்தல் வரத்து உள்ளது. குண்டூர் வத்தல் மார்க்கெட்டில் சம்பா வத்தல் ரூ.4,500 முதல் ரூ.6 ஆயிரம் என விற்பனையாகிறது.

## சத்துணவு திட்டத்துக்கு விடுமுறை முட்டை விலை மேலும் குறைப்பு



நாமக்கல்: நாமக்கல்லில் நேற்று தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணயக்குழு கூட்டம் நடந்தது. கூட்டத்தில் முட்டை விலையில் 10 காசுகள் குறைக்க முடிவு செய்யப்பட்டது. இதை தொடர்ந்து 270 காசாக உள்ள முட்டையின் பண்ணை கொள்முதல் விலை 260 காசாக நிர்ணயிக்கப்பட்டது. இந்த மாதம் பள்ளிகளுக்கு விடுமுறை என்பதால், சத்துணவு திட்டத்தில் முட்டை கொள்முதல் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் அதிகப்படியான முட்டை வரத்து உள்ளது. ஆனால் கடுமையான வெப்பம் காரணமாக தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை விற்பனை குறைந்துள்ளது. இதனால் முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். ஒரு கிலோ முட்டைக்கோழி 55 ஆகவும், ஒரு கிலோ கறிக்கோழி ^61 ஆகவும் விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

இன்றைய வேளாண் செய்திகள்
7.05.2013 A.M

## வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் உழவர் பெருவிழாவையொட்டி விவசாயிகள் பங்கேற்ற ஊர்வலம் பாரம்பரிய வேளாண்மை பொருள்களின் முக்கியத்துவம் குறித்து விளக்கம்

கிருஷ்ணகிரி,

வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் ஒரு பகுதியாக பாரம்பரிய வேளாண்மை பொருள்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஊர்வலம் நடைபெற்றது. இதில் திரளான விவசாயிகள் பங்கேற்றனர்.

உழவர் பெருவிழா

கிருஷ்ணகிரி மாவட்டம் முழுவதும் உழவர் பெருவிழா நடைபெற்று வருகிறது. வேப்பனப்பள்ளி வட்டாரத்தில் நடைபெற்ற உழவர் பெருவிழாவில் ஒரு பகுதியாக பாரம்பரிய வேளாண்மை பொருள்களின் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் ஊர்வலம் நடைபெற்றது. விழிப்புணர்வு ஊர்வலத்தை வேப்பனப்பள்ளி ஒன்றியக்குழுத் தலைவர் முனியப்பன் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

ஊர்வலத்தில் ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் வேளாண்மை உதவி இயக்குனர் ராஜேந்திரன், உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குனர் ரவி, மண்டல ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியர் ராமலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டு பாரம்பரிய வேளாண்மை பொருள்களின் முக்கியத்துவம் குறித்து பேசினார்கள். ஊர்வலத்தில் கலந்து கொண்ட 400க்கும் மேற்பட்ட விவசாயிகளுக்கு மானிய விலையில் தென்னங்கன்று வழங்கப்பட்டது. முடிவில் வேளாண்மை அலுவலர் செந்தில்குமார் நன்றி கூறினார்.

இடிப்பள்ளி கிராமம்

இடிப்பள்ளி கிராமத்தில் நடந்த உழவர் பெருவிழாவிற்கு வேளாண்மை உதவி இயக்குனர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார். அப்போது அவர் விவசாயிகளிடம் பேசியதாவது: நாற்று விட்டு நடவு முறையில் துவரை சாகுபடி செய்தால் ஏக்கருக்கு 1 டன் வரை மகசூல் பெறலாம் என கேட்டுக் கொண்டார். வேளாண்மை அலுவலர் செந்தில்குமார் மண் மாதிரி எடுக்கும் முறை குறித்தும், விதை நேர்த்தி செய்யும் முறை குறித்தும் செயல்விளக்கம் செய்து காண்பித்தார்.

வேளாண்மை வணிகத்துறை சார்பில் உதவி வேளாண்மை அலுவலர் நாகராஜ் மாங்காய் தரம் பிரிப்பது குறித்தும், அறுவடைக்கு பின்பு தொழில்நுட்பம் குறித்தும் விளக்கினார். தோட்டக்கலைத்துறை, பட்டு வளர்ச்சித்துறை, கால்நடைத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டு அந்தந்த துறை சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து விளக்கினார்கள். விழாவில் கருத்து கண்காட்சி, கலைநிகழ்ச்சி மற்றும் வீடியோ படம் மூலம் துறைகளின் திட்டங்கள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கப்பட்டது.

## தர்மபுரி பகுதியில் பலா பழம் விற்பனை படுஜோர்

தர்மபுரி,

தர்மபுரி பகுதியில் பலா பழம் விற்பனை படு ஜோராக நடைபெற்று வருகிறது.

பலா பழம்

முக்கனிகளில் ஒன்றான பலா பழம் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவருமே சுவைத்து சாப்பிடுவர். அளவில் பார்ப்பதற்கு பெரிதாக உள்ள இந்த பலா பழம் கோடை காலமான ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் அதிக அளவில் விற்பனைக்கு வரு கிறது. தமிழகத்தின் அனைத்து பகுதிகளிலும், சுவை மிக்க இந்த பலா பழங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பெரும்பாலும் பலா பழங் களை பொதுமக்கள் முழு பழமாக வாங்குவதை தவிர்த்து தள்ளு வண்டிகளில் வைத்து தனித்தனி சுளைகளாக விற் பனை செய்வதையே வாங்கி சுவைத்து மகிழ் கின்றனர்.

ஏழைகள் முதல் பணக்காரர்கள் வரை அனைவருமே வாங்கி சுவைத்து மகிழும் இந்த பலாபழம் தற்போது எங்கு பார்த்தாலும் விற்ப னைக்கு குவிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் மலைப் பகுதிகளில் விளையும் இந்த பலா பழங்கள் பல்வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வரு கிறது.

கேரள பலாபழம்

தர்மபுரி பகுதியில் தற்போது பலா பழம் விற்பனை படு ஜோராக நடைபெற்று வரு கிறது. தர்மபுரி மாவட்டத்தில் மாரண்டஅள்ளி பகுதியில் பலா பழங்கள் விளைந்தாலும் அந்த பழங்கள் பெங்களூர் பகுதிக்கு ஏற்றுமதி செய்யப் படுகிறது. தர்மபுரி பகுதிகளில் தற்போது விற்பனை செய்யப் படும் பழங்கள் கேரள மாநிலம் திருச்சூர், கோட் டை ளயம், பாலக்காடு போன்ற பகுதி களில் இருந்து லாரிகள் மூலம் கொண்டு வரப்படு கிறது.

இந்த பழங்களை தர்மபுரி பகுதியில் சுமார் 10-க்கும் மேற் பட்ட மொத்த வியாபாரிகள் கொள்முதல் செய்து சிறு வியாபாரிகள், தள்ளு வண்டி வியாபாரிகளுக்கு விற்பனை செய்கின்ற னர். இந்த பழங்கள் அளவை பொறுத்து ரூ.50 முதல் ரூ.200 வரை விற்பனை செய்கிறார்கள். இந்த பழங் களை தள்ளுவண்டி வியாபாரிகள் வாங்கி சென்று மு¬ றயாக வெட்டி பலாசுளை களை தனியாக பிரித்து எடுத்து விற்பனை செய்து வருகின் றனர்.

விற்பனை படுஜோர்

தற்போது வியாபாரிகள் பொது மக்களை கவரும் வகையில் தள்ளுவண்டியில் பலா பழங்களை வைத்து விற்பனை செய்து வருகின்ற னர். பழங்கள் மீது “ஈ”க்கள் மொய்க்காமலும், தூசுகள் படியாமலும் பாதுகாப்பாக வைத்து விற்பனை செய்து வருகின்றனர். பழத்தின் அளவை பொறுத்து சுளை ரூ.2 முதல் 3 வரை விற்பனை செய்கின்றனர். இதனை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி சுவைத்து மகிழ்கின்ற னர்.

தர்மபுரி பகுதிகளில் இந்த பலா பழங்களை விற்பனை செய்ய வியாபாரிகள் மிகவும் ஆர்வம் காட்டி வருகின்றனர். பழத்தை வாங்கி அதனை அறுத்து பக்குவமாக சுளையை எடுத்து அதனை விற்பனை செய்வதில் பெரும் சிரமம் இருந்தாலும் இந்த பழங்களை விற்பனை செய்வதன் மூலம் நல்ல லாபம் ஈட்டி வருகின்றனர். தர்மபுரி பகுதிகளில் மட்டும் 100-க்கும் மேற்பட்ட தள்ளு வண்டி வியாபாரிகள் பலா பழங்களை விற்பனை செய்து வருகின்றனர். பலா பழ சீசன் தொடங்கி உள்ள நிலையில் தற்போது விலை கூடுதலாக இருந்தாலும் போக போக விலை குறையும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர்.

## நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 10 காசுகள் சரிவு 260 காசுகளாக நிர்ணயம்

நாமக்கல்,

நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை நேற்று 10 காசுகள் சரிவடைந்து 260 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டைவிலை சரிவு

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக சரிவடைந்து வருகிறது. குறிப்பாக கடந்த 2 மற்றும் 4ந் தேதிகளில் நாமக்கல்லில் நடைபெற்ற தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை தலா 20 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை விலை 310 காசுகளில் இருந்து 270 காசுகளாக குறைந்தது. இந்த நிலையில் நேற்று நடைபெற்ற கூட்டத்தில் முட்டையின் கொள்முதல் விலையை மேலும் 10 காசுகள் குறைக்க முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 260 காசுகளாக சரிவடைந்து உள்ளது.

காரணம் என்ன?

பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:

சென்னை265, ஐதராபாத்215, விஜயவாடா, தனுகு215, பார்வாலா208, மும்பை252, மைசூர்255, பெங்களூர்260, கொல்கத்தா255, டெல்லி220.

கோடை விடுமுறை காரணமாக அங்கன்வாடி மையங்களுக்கு மட்டுமே முட்டை சப்ளை செய்யப்பட்டு வருகிறது. பள்ளிகளுக்கான முட்டை சப்ளை அடியோடு பாதிக்கப்பட்டு உள்ளது. அதேசமயம் அக்னி நட்சத்திரம் தொடங்கி உள்ளதால், பொதுமக்கள் இடையேயும் முட்டை நுகர்வு குறைந்து உள்ளது. எனவே முட்டை தேக்கத்தை குறைத்து, விற்பனையை அதிகரிக்க விலை குறைக்கப்பட்டு உள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர். மேலும் பிற மண்டலங்களில் முட்டை விலை சரிவடைந்து வருவதும் ஒரு காரணம் என கூறப்படுகிறது.

50 காசுகள் குறைந்தது

நாமக்கல் மண்டலத்தில் கடந்த 5 நாட்களில் மட்டும் முட்டை கொள்முதல் விலை 50 காசுகள் சரிவடைந்து உள்ளது குறிப்பிடத்தக்கது. கறிக்கோழி கிலோ ரூ.57க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. நேற்று பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.4 உயர்த்த முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.61 ஆக உயர்ந்து உள்ளது. முட்டைக்கோழி விலை கிலோ ரூ.55 ஆக நீடிக்கிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

## தஞ்சை மாவட்டத்தில் வறட்சி பகுதிகளில் மத்தியக்குழுவினர் இன்று ஆய்வு

தஞ்சாவூர்,

தஞ்சை மாவட்டத்தில் வறட்சி பகுதிகளில் மத்தியக்குழுவினர் இன்று ஆய்வு செய்கின்றனர்.

<u>இன்று ஆய்வு</u>

முதல்–அமைச்சர் ஜெயலலிதாவின் கோரிக்கையை ஏற்று தமிழகத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட மத்தியக்குழு வந்துள்ளது. வேளாண்மை பிரிவு துணை ஆலோசகர் மனாஸ்சவுத்திரி தலைமையில் 9 பேர் கொண்ட குழுவினர் இன்று(செவ்வாய்க்கிழமை) காலை தஞ்சை மாவட்டத்திற்கு வந்து வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிடுகின்றனர்.

தஞ்சையை அடுத்த வல்லத்திற்கு 10.45 மணிக்கு வரும் மத்தியக்குழுவினர் அங்கு வறட்சி காலத்தில் கால்நடைகளுக்கு வழங்குவதற்காக மேற்கொள்ளப்பட்டு வரும் தீவன உற்பத்தி பணிகளை பார்வையிடுகின்றனர். பின்பு அங்கிருந்து புறப்பட்டு மத்தியக்குழுவினர் ஆலக்குடிக்கு செல்கின்றனர். ஆலக்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும் உழவர் பெருவிழா மற்றும் கால்நடைகளுக்கான மருத்துவமுகாமில் மத்தியக்குழுவினர் கலந்து கொள்கின்றனர்.

<u>பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணி</u>

பின்பு அங்கிருந்து 11.40 மணிக்கு புறப்படும் மத்தியக்குழுவினர் நேராக சித்திரக்குடிக்கு செல்கின்றனர். அங்கு வறட்சி பகுதிகளை நேரில் பார்வையிட்டுகின்றனர். மேலும் சித்திரக்குடியில் நடைபெற்று வரும் போர்வெல் பணிகளையும் நேரில் பார்வையிடுகின்றனர்.

பின்பு அங்கிருந்து புறப்பட்டு 12.10 மணிக்கு ராயந்தூர் கிராமத்திற்கு செல்கின்றனர். அங்கு பண்ணைக்குட்டைகள் அமைக்கும் பணிகளையும், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையத்தையும் நேரில் மத்தியக்குழுவினர் பார்வையிடுகின்றனர். பின்பு மத்தியக்குழுவினர் தஞ்சை சுற்றுலா ஆய்வு மாளிகைக்கு வருகின்றனர். அங்கு மதிய உணவு சாப்பிடுகின்றனர்.

இதையடுத்து 12.40 மணிக்கு சீராளூர் செல்லும் மத்தியக்குழுவினர் அம்மா திட்ட பணிகளின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்கின்றனர். இந்த குழுவில் இயக்குநர்(புகையிலை மேம்பாடு) மனோகரன், நிதிசார் செலவினதுறை துணை இயக்குநர் ஸ்ரீகாந்த், மத்திய துணை செயலாளர் ஜோஸ், கண்காணிப்பு பொறியாளர் சுந்தரமூர்த்தி, வருவாய்த்துறையின் முதன்மை செயலாளர் ராஜீவ்ரஞ்சன், வேளாண்மைத்துறை முதன்மை அரசு செயலாளர் சந்தீப்சக்சேனா ஆகியோர் கலந்து கொண்டு ஆய்வு செய்கின்றனர். பிற்பகல் மத்திய குழுவினர் திருவாரூர் மாவட்டம் செல்கின்றனர்.

## குன்னம் வட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகை தாசில்தார் வழங்கினார்

குன்னம்,

குன்னம் வட்டத்தில் வறட்சியால் பாதிக் கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண தொகையை தாசில்தார் செல்வம் வழங்கினார்.

வறட்சி நிவாரணம்

குன்னம் ஊராட்சியில் உள்ள குன்னம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் வறட்சி நிவாரணம் வழங்கும் பணியை குன்னம் தாசில்தார் செல்வம் தொடங்கி வைத்து பேசினார். விழாவில் மண்டல துணை தாசில்தார் கஜேந்திரன், தனி அலுவலர் செல்வராஜ், ஆகி யோர் முன்னிலை வகித்தனர். செயலாளர் ராஜன் வர வேற்றார்.

விழாவில் தாசில்தார் செல்வம் கூறியதாவது:-

பெரம்பலூரை வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டமாக தமிழக அரசு அறிவித்ததைத் தொடர்ந்து அரசு உயர்மட்டக் குழுவினர் பெரம்பலூர் மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு அதன் அறிக் கையை தமிழக முதல்வரிடம் அளித்தனர்.
இதைத் தொடர்ந்து நிவாரணத் தொகை வழங்க தமிழக முதல்வர் உத்தர விட்டார்.

42 ஆயிரம் விவசாயிகள்

குன்னம் வட்டத்தில் வறட்சி யால் பாதிக்கப்பட்ட 42 ஆயிரத்து 141 விவசாயி களுக்கு ரூ. 15 கோடியே 95 லட்சத்து 15 ஆயிரத்தை மொத்தம் 16 தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கிகள் மூலம் நிவா ரணத்தொகை வழங்கும் பணி தொடங்கி உள்ளது.

இதில் வருவாய்த் துறை கிராம நிர்வாக அலுவலர்கள் மூலம் பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் புகைப்படத்துடன் கூடிய வறட்சி நிவாரண அடையாள அட்டை வழங்கப்பட்டு நிவாரணத்தொகை அளிக்கப் படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

கலந்து கொண்டவர்கள்

விழாவில் வருவாய் ஆய்வாளர் சரவணன், அம்மா பேரவை மாவட்ட பொருளா ளர் ஏ.கே. ராஜேந்திரன், ஒன்றிய கவுன்சிலர் முருகேசன் ஒன்றிய பொருளாளர் ராம லிங்கம் ஆகியோர் உள்பட பலர் கலந்து கொண்டனர்.
இறுதியில் துணை செயலாளர் விஸ்வநாதன் நன்றி கூறினார்.

## வேப்பந்தட்டையில் வறட்சி நிவாரணம் பெற புதிய கணினி சிட்டா தேவையில்லை தாசில்தார் தகவல்

வேப்பந்தட்டை,

வேப்பந்தட்டையில் வறட்சி நிவாரணம் பெற புதிய கணினி சிட்டா தேவையில்லை என தாசில்தார் தெரிவித் தார்.

வறட்சி நிவாரணம்

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை தாலுகா பகுதியில் தமிழக அரசின் சார்பில் விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் வழங்கப் பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு வெள்ள நிவாரணம் வழங்கியதில் ஒரே பெயருள்ள ஒருவருடைய பணத்தை மற்றொருவர் வாங்கி விட்டதாக புகார் எழுந்தது. இது போன்ற தவறுகள் நடந்து விடக்கூடாது என்பதற்காக விவசாயியின் புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டையுடன், கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெற்று சம்பந்தப்பட்ட கூட்டுறவு கடன் சங்கத்தில் பணத்தை பெற்றுக்கொள்ள வேண்டும் என பெரம்பலூர் மாவட்ட கலெக்டர் தரேஸ் அகமது உத்தரவிட்டார். இதனைத்தொடர்ந்து வேப்பந் தட்டை பகுதியில் கடந்த சில நாட்களாக வறட்சி நிவாரணம் வழங்கப்பட்டு வருகிறது.

வதந்தி

இதில் விவசாயிகள் புதியதாக கணினி சிட்டா எடுத்து வர வேண்டும் என யாரோ வதந்தியை பரப்பி விட்டனர். இதனால் விவசாயிகள் பெருந்திரளாக திரண்டு வேப்பந்தட்டை தாலுகா அலுவலகத்திற்கு ஒரே நேரத்தில் வந்து முற்றுகை யிட்டனர். இதனால் வேப்பந் தட்டை தாலுகா அலுவலகத் தில் பரபரப்பு ஏற்பட்டது. உடனடியாக இது பற்றி அரும்பாவூர் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது.இதனைத்தொடர்ந்து போலீசார் விரைந்து கூட் டத்தை வரிசைப்படுத்தினர். அதன் பின்னர் விசாரித்த போது வறட்சி நிவாரணம் பெறுவதற்காக புதிய கணினி சிட்ட பெற விவசாயிகள் திரண்டு வந்தது தெரிய வந்தது.

கணினி சிட்டா

இதனைத்தொடர்ந்து வேப்பந்தட்டை தாசில்தார் ஜோசப்பிரபாகரன் விவசாயி களை நேரில் சந்தித்து வறட்சி நிவாரணம் பெற 2 புகைப்படம், ரேசன்கார்டு நகல் மட்டும் போதுமானது. அதே நேரத்தில் புதிய கணினி சிட்டா தேவை இல்லை. ஏற்கனவே பெறப்பட்ட கணினி சிட்டா நகலோ, அல்லது நிலப் பட்டா புத்தக நகலோ, அல்லது பட்டா எண் தெரிவித் தாலோ போதுமானது எனக் கூறி விவசாயிகளை சமா தானப்படுத்தி அனுப்பினார். இதையும் நம்பாமல் பெரும் பாலான விவசாயிகள் புதிய கணினி சிட்டா வாங்கி கொண்டுதான் சென்றனர்.

## தஞ்சை உள்பட 5 மாவட்டங்களில் வறட்சி பகுதியை பார்வையிடுவதற்காக மத்திய நிபுணர் குழு திருச்சி வந்தது பாதிப்புகள் பற்றி கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் விளக்கி கூறினார்

திருச்சி,

தஞ்சை உள்பட 5 மாவட்டங்களில் வறட்சி பகுதிகளை பார்வையிடுவதற்காக மத்திய நிபுணர் குழு திருச்சி வந்தது. அந்த குழுவினரிடம் கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் வறட்சி பாதிப்புகள் பற்றி பட விளக்க காட்சிகளுடன் விளக்கி கூறினார்.

### மத்திய நிபுணர் குழு வந்தது

தமிழகத்தில் பருவமழை பொய்த்ததால் கடும் வறட்சி நிலவி வருகிறது. இந்நிலையில் தமிழக அரசு கேட்டுக்கொண்டதற்கு இணங்க மத்திய அரசு தமிழகத்திற்கு 10 பேர் கொண்ட நிபுணர் குழுவை அனுப்பி வைத்து உள்ளது. இந்த குழுவில் ஒரு பிரிவினர் நேற்று இரவு சென்னையில் இருந்து விமானம் மூலம் திருச்சி வந்தனர். விமான நிலையத்தில் மத்திய நிபுணர் குழுவினரை திருச்சி மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் வரவேற்றார்.

விமான நிலையத்தில் இருந்து மத்திய நிபுணர் குழுவினர் நேராக திருச்சி சுற்றுலா மாளிகைக்கு (சர்க்யூட் அவுஸ்) வந்து தங்கினார்கள். மத்திய திட்டக்குழு துணை ஆலோசகர் மானேஷ் சவுத்ரி தலைமையில் மத்திய அரசின் புகையிலை மேம்பாட்டு கழக இயக்குனர் மனோகரன், துணை இயக்குனர் ஸ்ரீகாந்த், மின்சார துறை துணை செயலாளர் ஜோஸ், தென்னக நதிகள் அமைப்பின் கண்காணிப்பு பொறியாளர் சுந்தரமூர்த்தி ஆகியோர் மத்திய நிபுணர் குழுவில் இடம் பெற்று உள்ளனர். இவர்களுடன் தமிழக அரசு செயலாளர்கள் ராஜீவ் ரஞ்சன், சந்தீப் சக்சேனா ஆகியோரும் வந்து உள்ளனர்.

### கலெக்டருடன் ஆலோசனை

சுற்றுலா மாளிகையில் திருச்சி மாவட்ட கலெக்டர் ஜெயஸ்ரீ முரளிதரன் திருச்சி மாவட்டத்தில் வறட்சியால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பற்றிய புகைப்படங்கள், தண்ணீர் இல்லாததால் கருகிய பயிர்கள். விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்புகள் பற்றிய வீடியோ காட்சிகளை ‘பவர் பாய்ண்ட்‘ மூலம் மத்திய மத்திய நிபுணர் குழுவினருக்கு விளக்கி கூறி ஆலோசனை நடத்தினார். சுமார் 30 நிமிட நேரம் இந்த ஆலோசனை கூட்டம் நடைபெற்றது.

<u>இன்று பார்வையிடுகிறார்கள்</u>

மத்திய நிபுணர் குழுவினர் இன்று காலை சுற்றுலா மாளிகையில் இருந்து புறப்பட்டு திருச்சி மாவட்டத்தில் திருவெறும்பூர் பகுதியை சேர்ந்த வேங்கூர் உள்பட சில இடங்களில் பார்வையிடுகிறார்கள். அதன் பின்னர் தஞ்சை, திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்து வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டு விவசாயிகளிடம் கருத்து கேட்கிறார்கள். இன்று இரவு திருவாரூரில் தங்கும் மத்திய நிபுணர் குழுவினர் நாளை மாலை மீண்டும் திருச்சிக்கு வந்து விமானம் மூலம் சென்னைக்கு புறப்பட்டு செல்கிறார்கள்.

## வறட்சி பாதிப்பை மதிப்பிட்டு பாதிப்படைந்த விவசாயிகள் அனைவருக்கும் நிவாரணம் வழங்க கோரிக்கை

விருதுநகர்,

வறட்சி பாதிப்பை மதிப் பிட்டு பாதிப்படைந்த அனைத்து விவசாயிகளுக் கும் நிவாரணம் வழங்க வேண்டும் என விவசாயி கள் கலெக்டரி டம் கோரிக்கை மனு கொடுத் துள்ளனர்.

அறிவிப்பு

முதல்-அமைச்சர் ஜெய லலிதா சென்னையை தவிர பிற மாவட்டங்களை வறட்சி பாதிப்படை அடைந்த மாவட் டங்களாக அறிவித்து அந்த மாவட்டங்களில் வறட்சி பாதிப்பை கணக்கிட்டு அரசு அறிக்கை அனுப்பி வைக்குமாறு மாவட்ட நிர்வாகத்திற்கு உத் தரவிட்டார்.

மேலும் நிதி அமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் தலைமையில் அமைச்சர்கள் உயர்மட்ட குழுவினைஅனுப்பி வைத்து வறட்சி பாதிப்புபற் றிய விபரங்களை சேகரித்து அறிக்கை தருமாறு கேட்டுக் கொண்டார். இந்த அறிக்கை யின் அடிப்படையில் வறட்சி பாதிப்பின் அளவினை பொருத்து விவசாயிகளுக்கு நிவாரண உதவி வழங்கவும், உதவி தொகையினை அவர் களது

வங்கி கணக்கில்நேரடி யாக வரவு வைக்கவும் உத்தர விடப்பட்டது. விருதுநகர் மாவட்டத்திற்கு வறட்சிநிவா ரண உதவி வழங்க ரூ.59கோடி நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டு உள்ளது.

பாராமுகம்

ஆனால் பல கிராமங்களில் பயிர்சேதம் பற்றி மதிப்பீடுவதற்கு அதிகாரிகள் யாரும் வராமல் பாராமுகமாகவே இருந்து விட்டனர் என்று பரவலாக புகார் எழுந்துள்ளது. சாத்தூர் யூனியனில் உள்ள கண்மாய் சூரங்குடி, அருப்புக்கோட்டை யூனியனில் உள்ள ஆத்திப்பட்டி, நரிக்குடி, விருதுநகர் யூனியனில் உள்ள பெரிய பேராலி ஆகிய கிராமத்தை சேர்ந்த விவசாயிகள் நேற்று கலெக்டர் அலுவலகம் வந்து கலெக்டரிடம் கோரிக்கை மனு கொடுத்தனர்.

மதிப்பீடு

அதில் தங்கள் கிராமங்களுக்கு வருவாய் அலுவலர்களோ, தோட்டக்கலை மற்றும் விவசாய அலுவலர்களோ வந்து பயிர் சேதத்தை மதிப்பிட வில்லை என்றும் இரவை பாசனத்தின் மூலம் மக்காசோளம் சாகுபடி செய்த எங்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றும்,உடன டியாக எங்கள் பகுதி பாதிப் பினை மதிப்பீட்டு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும் என்று கோரி உள்ளனர்.

மனுக் களை பெற்றுக் கொண்ட கலெக் டர் ஹரிஹரன் இது பற்றி உரிய நட வடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார். இந்த நிலை யில் மத்திய அரசின் நிபுணர் குழு நாளை விருதுநகர் மாவட்டத் தில் வறட்சி பாதிப்பு அடைந்த பகுதிகளை பார்வையிட வரு கிறது.

## சிவகங்கை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.75 கோடி நிவாரண நிதி கலெக்டர் ராஜாராமன் தகவல்

சிவகங்கை,

சிவகங்கை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு ரூ.75 கோடி நிவாரண நிதி வழங்கப்பட உள் ளது என்று கலெக் டர் ராஜாராமன் தெரிவித் தார்.

வறட்சி நிவாரணம்

சிவகங்கை மாவட்ட கலெக் டர் ராஜாராமன் நேற்று நிரு பர் களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதா வது:-

சிவகங்கை மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள விவசாயி களுக்கு வழங்குவதற்காக தமி ழக அரசு ரூ.75 கோடி வழங் கியுள்ளது. இந்த மாவட்டத்தில் நெல் மற்றும் மிளகாய் பயிர் பாதிப்படைந்தவர்களுக்கு இந்த நிவாரண தொகை வழங்கப்படும்.

நெற்பயிரை பொறுத்தவரை ஏக்கருக்கு ரூ.5ஆயிரமும், மிள காய் பயிரை பொறுத்தவரை ஏக்கருக்கு நஞ்சை பகுதிக்கு ரூ.4 ஆயிரமும், புஞ்சை பகுதிக்கு ரூ.3ஆயிரமும் வழங் கப்படும். இந்த தொகை சம் பந்தப்பட்ட விவசாயிகளின் வங்கி கணக்குகளில் வரவு வைக்கப்படும். மேலும் வறட்சி நிவாரண திட்டத்தின் கீழ் மாவட்டம் முழுவதும் 3 ஆயி ரம் இடங்களில் பண்ணை குட்டை அமைக்கவும் அரசு அனுமதி அளித்துள்ளது.

ஆதார் அட்டை

ஆதார் அடையாள அட்டை எடுக்க விடுப்பட்டு போனவர்களுக்கு மீண்டும் எடுப்பதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. விடுப் பட்டு போனவர்கள் அந்தந்த பகுதி தாலுகா அலுவலகம் அல்லது கிராம நிர்வாக அலு வலங்களில் வழங்கப்படும் தேசிய மக்கள் தொகை பதி வேடு குடும்ப அட்டவணைக்கு உரியவிண்ணப்ப படிவங்களை பெற்று பூர்த்தி செய்து கொடுக்க வேண்டும். அவை களை பதிவு செய்து விடுப்பட்டு போனவர்களுக்கு ஆதார் அடையாள அட்டை வழங் கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.